Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பங்குனி 31 சனிக்கிழமை (13.04.2013) | பக்கங்கள் 20 | ஓசை – 195


புதிய ரதம் 03



உதவிக்குரியவர்கள் 07


முன்னேற்றம் 08


ஞானம்ஸ் வசம் 09


இன்னிசை ஓய்வு 17

# இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா எப்பொழுதும் தயார்



(வொஷிங்ரன்)

அமைதிக்கும் நல்லிணக்கத்துக்காகவும் இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா எப்போதும் தயாராக விருப்பதாகவும் பிறக்கப்போகும் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் தமிழ் - சிங்கள மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தும், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கையில் தமிழ் - சிங்களப் புத்தாண்டைக் கொண்டாடும் உலகெங்கும் உள்ள இலங்கையர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகிழ்ச்சியான விடுமுறை மற்றும் வளமான புத்தாண்டுக்கு இனிய வாழ்த்துக்களை வழங்குகிறேன். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கொண்டாட்டம், புதிய தொடக்கம் குறித்த நம்பிக்கையையும், புதிய வாக்குறுதிகளையும் கொண்டு வருகிறது.

புத்தாண்டு எல்லா இலங்கையர்களும் அமைதி, நல்லிணக்கத்துக்கு இணைந்து பணியாற்ற ஊக்கமளிக்கும் புதிய வாய்ப்புகளைக் கொண்டு வருகிறது. நாட்டைப் பிளவுபடுத்தியிருந்த மோதல்களில் இருந்து விடுபட்டு நான்கு ஆண்டுகள் கழித்து, நல்லிணக்கம், பொறுப்புக்கூறலில் முன்னேற்றத்தை அடைவதற்கான பயணத்தில் இலங்கை மக்களுக்கு உதவ, அதிபர் ஒபாமா சார்பிலும், அமெரிக்க மக்களின் சார்பிலும், நான் ஆவலாக இருக்கிறேன்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க உறவைச் சீராக்க தயாராகிறது கொழும்பு

(கொழும்பு)

அமெரிக்காவுடன் இராஜதந்திர ரீதியாக மட்டுமல்லாமல் பாதுகாப்பு மற்றும் கலாசார ரீதியான உறவுகளை மேலும் வலுவாக்குவதற்கு அரசு அதிக பிரயத்தனம் செய்து வருகின்றது.

இதற்காக வெளிவிவகார அமைச்சு புதிய செயற்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இச்செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக அரசு இதற்காக அமெரிக்காவை மையமாகக் கொண்ட பொதுமக்கள் தொடர்பு நிறுவனமொன்றிற்கு இலங்கை மத்திய வங்கி இந்

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு துறைமுகத்தில் அதிகரிக்கிறது சீன ஆதிக்கம்

(கொழும்பு)

கொழும்புத்துறை முகத்தில் பணிபுரியும் இந்தியத் தொழிலாளர்களை அகற்றிவிட்டு சீனாவின் தொழிலாளர்களை அதற்குப் பதிலாக பிரதியீடு செய்வதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்துறைமுகத்தின் பௌதீக வளங்களை விஸ்தரிக்கும் செயற்திட்டம் ஒன்றும் ஏற்கனவே சீன அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து இப்போது துறைமுக ஆளணியிலும் சீன ஆதிக்கம் கால்பதிக்க ஆரம்பித்துள்ளதாக துறைமுக தொழிற்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில், கப்பல்களை கட்டும் மற்றும் பழுதுபார்க்கும் கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் செயற்பட்டு வருகிறது. இங்கு பெரும்பாலும் இந்தியத் தொழிலாளர்களே பணியாற்றி வருகின்றனர். இவர்களையே அங்கிருந்து வெளியேற்றிவிட்டு இலங்கையர்களுக்கு இத்துறையில் பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதனால் தமிழ்நாட்டில் இருந்து வரும் கப்பல்களில் இருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.நகரைக்கட்டி எழுப்புவது எப்படி இந்திய அதிகாரிகள் களத்தில்

யாழ்.நகரத்தை நவீனமயமாக்குவது தொடர்பாகவும், நகர அபிவிருத்தியில் பின்பற்றப்படும் தொழில்நுட்பம் மற்றும் திட்டமிடல்கள் குறித்தும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் யாழ்.மாநகர முதல்வருடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் விசேட குழு ஒன்று நேற்று முன்தினம் நகருக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

முதல்வரின் பணிமனையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இந்திய வெளியுறவு அலுவல்கள் அமைச்சின் விசேட செயலாளரும் நிதி ஆலோசகருமான விமல்யில்பா, அதே அமைச்சின் இணைச் செயலாளர் அசோக் சின்கா, இந்திய உயர் நீதிமன்ற தலைவர் சுரேஸ் மேனன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது யாழ்.மாநகரத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

## ‘விஜய’ வருட நற்கருமங்கள்

### வாக்கிய பஞ்சாங்கத்தின் படி

இன்று முன்னிரவு 11.58 மணிக்கு பூர்வபக்க சதுர்த்தி திகதியில் கார்த்திகை நட்சத்திரம் நான்காம் பாதத்தில் சூரியன் கால வோரையில் இராட்சத குணவேளை ‘விஜய’ புதிய வருடம் பிறக்கிறது.

அணியும் ஆடை - மஞ்சள், நீல நிறங்கள்

ஆபரணம் - புஸ்பராகம், நீலக்கல்

### திருக்கணித பஞ்சாங்கத்தின் படி

நாளை அதிகாலை 1.29 மணிக்கு புதிய ‘விஜய’ வருடம் பிறக்கிறது.

ஆடை - நீலம், வெள்ளை

ஆபரணம் - இந்திரநீலம்

19 ஆம் பக்கம் பார்க்க




தொழில் தேடலாம் ! தொழிலாளர்களைத் தேடலாம்!!



திறமைக்கேற்ற வேலைவாய்ப்பு வேண்டுமா?
உயர்கல்விக்குப் பின்னர் தொழில்வாய்ப்பைத் தேட எங்கும் அலைய வேண்டாம்!
உங்களுக்கு வழிகாட்ட நேசக்கரம் நீட்டும் ஒரேயொரு இணையம்
வினைத்திறன் மிக்க தொழிலாளர் படையின் சங்கமம்
இரண்டும் ஒரே இணையத்தில். விரையுங்கள் WWW.jaffna jobs.lk
(R/178)

# யாழில் கடந்த வாரத்தில் 65 இலட்சம் ரூபா மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரத்தில் 63 இலட்சம் ரூபா பெறுமதியான பணமோசடி, காசோலை மோசடி மற்றும் பணம் பொருள், தங்க நகை கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக முறையிடப்பட்டுள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்றி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 6 ஆம் திகதி நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வீட்டில் 20 ஆயிரம் ரூபா பணம் களவாடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் குருநகரைச்சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டுள்ளார்.

மானிப்பாய் மேரி வீதியில் உள்ள வீடு ஒன்றில் 50 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 10 ஆம் திகதி முறையிடப்பட்டதாகவும் சந்தேக நபர்கள் ஒருவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

கடந்த 4 ஆம் திகதி சுன்னாகம் பகுதியில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டதாக சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் சந்தேகநபர் தேடப்பட்டுவருகிறார்.

சூறாவத்தைப் பகுதியில் 16 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளதுடன், கடந்த 5 ஆம் திகதி கைதடிப் பகுதியில் 62500 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் தொடர பாக சந்தேக நபர்கள் கைது செயயப்படவில்லை.

இதேவேளை நாவற்குழியில் கடந்த 7 ஆம் திகதி 37400 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியும் அறுக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் சங்கிலியும் மீட்கப்பட்டது.

உரும்பிராய், மற்றும் பலகலைக்கழக வீதிப்பகுதிகளில் 7500 ரூபா, 6500 ரூபா பெறுமதியான இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவத்துடன் தொடர்புடைய அரியாலையைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள போதிலும் சைக்கிள்கள் மீட்கப்படவில்லை.

மிருசுவில் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி வீடு உடைத்து 130,250 ரூபா பெறுமதியான நகை, தொலைபேசி, பணம் என்பன திருடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 27.07.2012 இல் 12 இலட்சம் ரூபா பணம் பெற்று வெளிநாடு அனுப்புவதாகக் கூறி பணமோசடி செய்த ஆவரங்கால் கிழக்கு புத்தூர் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

04.01.2013, 10.01.2013 ஆகிய திகதிகளிடப்பட்ட காசோலைகளை வழங்கி 37 இலட்சம் ரூபா மோசடி செய்த சந்தேகநபர் 12.05.2012 இல் 11 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கி மோசடி செய்ததாக முறையிடப்பட்டுள்ளது. இவ்விரு சம்பவங்கள் தொடர்பில் ஆதிகோவிலடியைச் சேர்ந்த சந்தேகநபரைக் கைதுசெய்ய வல்வெட்டித்துறை பொலிஸார் புலனாய்வுகளை மேற்கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)




## திறக்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் கிளைகள் விரிவாக்கல் சேவை நிலையங்கள் எதிர்வரும் சித்திரை புத்தாண்டு தினத்தன்று திறக்கப்படமாட்டாது என வங்கியின் வட பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

புதுவருட தினத்திற்கு மறுநாள் திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறைதினம் என்பதால எதிர்வரும் பதினாறாம் திகதி செவ்வாய்க்கிழமை வாடிக்கையாளர்கள் வங்கிக் கிளைகள் விரிவாக்கல் சேவை நிலையங்களில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)

## பெண் கடத்தல்

(யாழ்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வாரம் பெண் ஒருவர் கடத்தப்பட்டார். 19 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் கடத்தப்பட்டதாகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறையிடப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதற்கமைய கடத்தலுடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்களில் ஒருவரை தெல்லிப்பழை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியதுடன் மேலும் இரு சந்தேக நபர்களைத் தேடி வலைவிரித்துள்ளனர். (இ)



DFCC வர்த்தன வங்கியின் யாழ். மாவட்டக் கிளையின் 4 ஆவது கிளை நெல்லியடியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இதில் விருந்தினர்களை அழைத்துவருவதனையும், நிறைவேற்வேற்றுப் பணிப்பாளர் லக்ஸ்மன் சில்வா கிளையினை திறந்துவைப்பதையும் அருகில் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.ரவீந்திரா உட்பட பிரமுகர்கள் நிற்பதையும், முதலாவது வங்கி கணக்கு ஆரம்பித்து வைப்பதையும் காணலாம். (01)

## சேவைநேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் என்.டி.பி. வங்கி வாடிக்கையாளர்கள் நலன்கருதி தனது சேவைநேரத்தினை மாலை ஆறுமணிவரை நீடித்துள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் வார நாட்களில் அனைத்து வங்கி சேவைகளையும் மாலை ஆறு மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

சுன்னாகத்தில் உள்ள என்.டி.பி. வங்கிக்கிளை ஏற்கனவே நீடித்த சேவை நேரத்தினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை மேற்படி வங்கி புதுவருட தினத்தன்றும் மறுநாள் திங்கட்கிழமையும் திறக்கப்படாது எனவும் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே வங்கியில் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (54)

## தேசிய சேமிப்பு வங்கியின் புதுவருட சேமிப்பு பரிசு

தேசிய சேமிப்பு வங்கி புதுவருட தினத்தன்று பணவைப்பு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு பல பரிசுப் பொருட்களை வழங்க உள்ளது.

இருபத்தையாயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகை வைப்புக்கு சமையல் உபகரணத் தொகுதி ஒன்றும், பத்தாயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குச் சாச்சர் லைட் என்பன வழங்கப்படவுள்ளது. புதுவருட சுபநேர கொடுக்கல் வாங்கல்களுக்காக காலை 8.30 மணிமுதல் 12.30 மணிவரை தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள் திறந்திருக்கும் என தெரிவிககப்பட்டுள்ளது.

## அதிஷ்டலாப ரிக்கெற்; நெல்லியடி வாசிகளுக்கு பரிசு

(கரணவாய்)

நெல்லியடிப் பிரதேசத்தில் லொத்தர் ரிக்கெற் மூலம் 3 நபர்கள் பணப்பரிசில்களை வென்றுள்ளனர். நெல்லியடியில் உள்ள லொத்தர் விற்பனை முகவர் தங்கவேலு சகிகரன் என்பவர் விற்பனை செய்த லொத்தருக்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசு கரவெட்டிப் பிரதேச சபை சாரதி தேவமதன் என்பவருக்கு கிடைத்துள்ளது.

இதைவிட மனோகரி என்பவர் விற்ற அபிவிருத்தி லொத்தருக்கு உடுப்பிட்டியைச் சேர்த்த நபருக்கு 20 இலட்சம் ரூபாவும் பிறிதொரு முகவர் யசோதா விற்ற லொத்தர் ரிக்கெற்றுக்கு நெல்லியடி வாசிக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசு கிடைத்துள்ளது.

நெல்லியடி முகவர் மூலமாக விற்பனை செய்யப்பட்ட லொத்தர்களுக்குத் தொடர்ச்சியாகப் பணப்பரிசில் வடமராட்சி நெல்லியடிப் பிரதேச மக்களுக்கு கிடைப்பது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## கொலைச் சந்தேகநபர் கைது

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகாமையில் கடந்த மாதம் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் வர்த்தகர்கள் மீது அசிட்வீசி தாக்குதல் செய்துவிட்டு வாளால் வெட்டிக் காயப்படுத்திக் கொலைசெய்ததாகக் கூறப்படும் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலைச் சம்பவத்திற்கு உதவிசெய்த மேலும் இரண்டு சந்தேகநபர்களைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வாள், மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## நான்குமணிவரை வங்கிச்சேவை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் சேவை நேரங்கள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரையும் மாலை 3.00 மணிவரை நடைபெற்ற வாடிக்கையாளர் சேவையே தற்போது ஒருமணிநேரத்தால் அதிகரிக்கப்பட்டு நான்கு மணிவரை சேவை நடைபெறுகின்றது.

இதன்படி அனைத்து மக்கள் வங்கிக் கிளைகள், சேவைநிலையங்களும் மாலை நான்குமணி வரை சேவையாற்றுவதற்காகத் திறந்திருக்கும். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளை ஏற்கனவே மாலை ஐந்து மணிவரை சேவையாற்றும் அதே நேரம் கன்னாதிட்டி கிளை வருடத்தில் அனைத்து நாட்களும் வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுவதற்காகச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (54)

## சிறுவிளம்பரம்

சகல வசதிகளும் கொண்ட காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. குடியிருக்க அல்லது ஏதேனும் தொழிலுக்கு பாவிக்கக்கூடிய நல்ல சுற்றாடலில் உண்டு.

க.சீவறட்ணம் சிவராசா, சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/176)

# கிராம அலுவலர்களின் சேவையை முழுமையாக பெறமுடியவில்லை

## – முல்லை. மக்கள் ஆதங்கம் –

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய சில கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் கிராம அலுவலர்களின் சேவைகள் முழுமையாக இல்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 46 கிராம அலுவலர் பிரிவுகளும், ஒட்டுசுட்டான் பிரிவில் 27 கிராம அலுவலர் பிரிவுகளும், மாந்தை கிழக்கு பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுகளும், துணுக்காய் பிரிவில் 20 கிராம அலுவலர் பிரிவுகளும், புதுக்குடியிருப்பு பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ள நிலையில், இக்கிராம அலுவலர் பிரிவில் குறிப்பிட்ட சில பிரிவு கிராம அலுவலர்களின் சேவைகளை முழுமையாக பெறமுடியாது தாம் பல்வேறு கஷ்டங்களை அனுபவிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மக்கள் யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து பின்னர் மீள்குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகள், வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு என்பன கிராம அலுவலரூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், சில கிராம அலுவலர்கள் அலுவலகத்திற்கு கடமை நேரத்திற்கு வருவதில்லை எனவும், சில கிராம அலுவலர்கள் 2 கிராமத்தின் நடவடிக்கைகளை பதில் கடமையாக பொறுப்பேற்பதால் இரண்டையும் செய்யமுடியாது அங்கும் இங்கும் அலைவதால் பாதிக்கப்படுவது மக்களே என சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிராமத்திற்குரிய கிராம அலுவலரை மாற்றுவதற்குரிய தகைமை மக்களுக்கு இருக்கின்ற போதிலும், சில கிராம அலுவலர்கள் மக்களுடன் கலந்துரையாடி தம்மை மாற்றவேண்டாம் என தெரிவிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களுக்குரிய சேவைகளை ஒழுங்கான முறையில் கிராம அலுவலர்கள் மேற்கொள்வார்களாயின் மக்கள் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமக்கு அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகள் அவசியம் தேவையாகவுள்ளதாகவும், இதனை தாம் பெறுவதில் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கும் மக்கள் கிராம அலுவலர்களின் சேவைகளை முழுமையாக பெற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# புதிய ரதத்தில் தேர் உற்சவம்



வேலணை - மண்கும்பான் வெள்ளைப்புற்றடி அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து 10 நாட்களாக நடைபெற்றுவரும் உற்சவத்தில் நாளை தேர்த்திருவிழாவும், நாளை மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. இந்த வருடம் இவ்ஆலயத்திற்கு கொழும்பில் இருந்து 1 கோடி 3 இலட்சம் பெறுமதியான புதியதேர் கொண்டுவரப்பட்டு நேற்று முன்தினம் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெற்றமை காணலாம். (21,05)



பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்தின் தேவைகள் தொடர்பாக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) மற்றும் ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் பாலகிருஸ்ணன் (ஜீவன்) ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ஆகியோர் நேரில் சென்று கிராம பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தபட்ட வலயமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வலயக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

பிரிவு - 1

வாசிப்பு

ம.மேரிசெபஸ்திகா (யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை), சி.விவானுஜன் யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), லெ.சி.மெலிஷா (யா/புற்றளை மகா வித்தியாலயம்).

பிரிவு - 2

வாசிப்பு

ஏ.மயூரி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), யோ.துவாரகா (யா/உடுத்துறை மகா வித்தியாலயம்

வி.விதுசா (யா/சென் தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), வ.சுருதிகா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

பிரிவு - 1

பேச்சு

சி.கஜன் (யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), ஸ்ரீ.பதஞ்சலி (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), இ.யசோதா யா/துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலை).

பிரிவு - 2

பேச்சு

ஜெ.கஜிதா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ம.ருக்ஷன் (யா/ஹாட்லிக் கல்லூரி), க.விஸ்ணுஜி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

பிரிவு - 3

பேச்சு

சி.வைஷ்ணவி(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ச.ஜெகதீஸ்வரன் (யா/உடுப்பிட்டி ம.கல்லூரி), எச்.மேரிபவுஸ்ரினா (யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா),

பிரிவு - 4

பேச்சு

வ.சங்கீர்த்தனா (யா/வடமராட்சி ம.ம.கல்லூரி), சி.சிந்துஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), க.கிருஸ்ணபரதன் (யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்), வி.விதுர்ஷா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.)

பிரிவு - 5

பேச்சு

கு.வைதேகி (யா/வடமராட்சி மத்திய மகா வித்தியாலயம்), இ.திவாகர் (யாசிதம்பராக் கல்லூரி),வ.ஜெயப்பிரசன்னா (யா/ஹாட்லிக் கல்லூரி).

(தொடரும்...)

# பாடசாலைக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு ஏற்பாடு

(வரணி)

வடக்கு வரணி யாழ்.சைவப் பிரகாச வித்தியசாலைக்கு சுற்றுமதில் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருவதாக பாடசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பாடசாலையின் சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றதுடன், அடிக்கல்லை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.கதிர்காமநாதன் நாட்டிவைத்தார்.

90 வருடங்கள் பழமை வாய்ந்த இப்பாடசாலைக்கு இதுவரை சுற்றுமதில் அமைக்கப்படாது கிடுகு வேலிகளே போடப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு வருடமும் இவ்வேலிகளை புதுப்பிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுவந்தது.

இதனையடுத்தே தற்போது சுற்றுமதில் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (150)

# யாழில் குடிநீர் பாவனைக்கு 5 கோடி கலன்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் மட்டும் 5,586,666 கலன்கள் குடிநீர் பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பின் யாழ்.மாவட்ட முகாமையாளர் பாலசுப்பிரமணியம் தவேந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 15 குடிநீர் வழங்கும் திட்டங்களான வேம்பிராய், கைதடி, வல்வெட்டித்துறை, வாதரவத்தை, சுன்னாகம், காரைநகர், அனலைதீவு, நயினாதீவு, அராலி, வட்டுக்கோட்டை, மண்டதீவு, வேலணை, ஊர்காவற்துறை போன்ற நீர் வழங்கல் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த 15 திட்டத்தில் கடந்த மார்ச் மாதம் மட்டும் 5,586,666 கலன்கள் குடிநீர் பொதுமக்களின் பாவனைக்காக விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (25)

# மத்தியஸ்தர் குழு உறுப்பினர்களுக்கு ஐந்து நாள் பயிற்சிப்பட்டறை



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் முதல் முறையாக மத்தியஸ்தர் குழுவை அமைக்கும் பொருட்டு, நேர்முகப்பரீட்சை மூலம் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 22 உறுப்பினர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி வகுப்பு கடந்த மாத இறுதிப்பகுதியில் மட்டுவில் நாடு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

நீதி அமைச்சின் பயிற்சி இணைப்பாளர் பி.தெமட்டகொட தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில், பயிற்சிவளவாளர்களாக நீதி அமைச்சைச் சேர்ந்த ஜேம்ஸ் பீரிஸ், ஹப்பார் ஆகியோர் கடமையாற்றினர். ஐந்து நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சி தமது வாழ்வில் பெருமாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது என பயிற்சியாளர்கள் தெரிவித்தனர். (112)

நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர் பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது. - *பான்னி ப்ளேயர்*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**

## வேறு வேறு உலகங்கள்!

புலம்பெயர்ந்து வாழும் மக்கள் என்னதான் நாடுகடந்த அரசாங்கம், சுயநிர்ணயம் என்று தமிழ்த் தேசிய வீரம் பேசிக் கொண்டிருந்தாலும் அவர்களறியாமலே மெல்ல மெல்ல தஞ்சம் புகுந்த அந்தந்த நாடுகளைச் சேர்ந்தவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. புலம்பெயர்ந்து செல்ல நேர்வதில் உள்ள மிக முக்கிய பிரச்சினையே நம் அடையாளங்களை இழத்தல் என்பதுதான்.

ஊரோடு ஒத்து வாழ் என்பதும் ரோமில் ரோமானியன் போல இரு என்பதும் உலகெங்கும் உள்ள மக்களின் பொது இயல்பாகவே இருக்கிறது. எந்த நாட்டினராக இருந்தாலும், தொடரும் தலைமுறைகள் தாம் குடியேறிய மண்ணில் தங்களுக்கு தனித்துவம் தரும் அடையாளங்களை அவமானமாகக் கருதி அவற்றை இழந்து ஒரு பெருங்கூட்டத்தில் தங்களைக் கரைத்துக்கொள்ள முயற்சி செய்வதுதான் உலக இயல்பாக இருக்கிறது.

படிப்பு, வாழ்க்கை வசதிகள், வாழும் முறைகளை உள்வாங்கிக் கொள்ளல் மூலம் போய்ச் சேர்ந்த நாட்டுப் பிரசைகளாகவே அவர்கள் மாறுவதில் ஒன்றும் வியப்பில்லை. குறிப்பாக இங்கு இளமைப் பருவத்தைக் கழித்துவிட்டு புலம்பெயர்ந்து சென்ற தலைமுறையினரிடம் மட்டும்தான் பழைய வாழ்க்கைமுறையின் கூறுகள் எஞ்சியிருக்கும். இளம் வயதில் வாழ்க்கைமுறை பற்றிப் பெறப்பட்ட கருத்துக்களை மாற்றிக் கொள்வது எவருக்கும் கடினமானதே. இதனாலேயே தமிழர்கள் தாம் வாழப் புகுந்த நாடுகளில். தாம் இலங்கையில் வாழ்ந்த வாழ்வின் அம்சங்களை மீளமைத்து ஒரு குட்டி யாழ்ப்பாணத்தையோ அல்லது மட்டக்களப்பையோ உருவாக்க முயல்கின்றனர்.

ஆனால் அங்கு சென்றபின் உருவாகிய புதிய தலைமுறையினரின் வாழ்வுப்போக்கும் சிந்தனையும் அந்தந்த நாடுகளை ஒட்டியதாக மாறிப்போவ்து தவிர்க்க முடியாதது. அந்த நாட்டுப் பிள்ளைகளுடனேயே பெரும்பகுதி நேரத்தைக் கழிக்கும் அவர்கள் பாடசாலையில் சிறுவயது முதலே கல்வியுடன் வழங்கப்படும் வளர்ந்து வரும் பல்வேறு நவீன கருத்துக்களினால் செல்வாக்குறுகின்றனர். இதனால் அவர்களது வாழ்க்கை நோக்கு என்பது பெற்றோரது வாழ்க்கை நோக்கிலிருந்து மாறுபட்டு அமையவே வாய்ப்பிருக்கிறது.

இலங்கையை விட புலம் பெயர்ந்த நாடுகளில் தொழில்நுட்ப வளர்ச்சி மிக வேகமானது. புலம்பெயர்ந்த நாட்டில் பிறந்து வளரும் பிள்ளைகள் அனைவரும் சிறுவயது முதல் இவற்றுடன் வளர்வதால் வீட்டில் உள்ள பல மின்னியல் மின்சார சாதனங்களை பெற்றோரை விட திறமையுடன் கையாளும் நிலைமை உள்ளது. இதனால் சில இளம் பிள்ளைகள் பெற்றோரை அறிவற்றவர்கள் போலவும் எண்ணுவதை நடத்துவதைப் பார்க்க முடியும்.

இந்த தலைமுறை இடைவெளியின் காரணமாக வீட்டை உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் உரிய இடமாக மட்டுமே அந்தப் பிள்ளைகள் கருதுகிறார்கள். பெற்றோரது சிந்தனைப் போக்குக்கும் தமது சிந்தனைப் போக்குக்கும் இடையில் மிகப் பெரும் இடைவெளி இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். யாழ்ப்பாண வாழ்வை புலம்பெயர்ந்த நாடுகளில் மீளமைக்கும் பணியில் பெற்றோர் ஈடுபட்டிருக்க பிள்ளைகள் வேறொரு உலகில் வாழ்வது போல வாழ்கிறார்கள்.

போய்க் குடியேறிய யாரும் தங்கள் நாடுகளுக்கு இனி என்றாவது முழுமையாகத் திரும்பி வந்து வாழ விரும்புவார்கள் என்று தோன்றவில்லை. இவர்கள் தற்போதுள்ள நாடுகளில் குடியுரிமை பெறுவதிலும், சொத்துகள் சேர்ப்பதிலும், அந்த வாழ்க்கை வசதிகளின் அடிமைகளாகி விட்டிருப்பதையும் பார்க்கும்போது, சில காலத்துக்கு இங்கு வந்து வந்து திரும்பிச் செல்லும் பயணிகளாகவும், அடுத்தடுத்த சந்ததிகள் வராமலே விடக் கூடிய நிலைமையும்தான் இருப்பதாகத் தெரிகிறது.

- **ஆசிரியர்**

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க
# நேரடி கொள்வனவிற்கு தீர்மானம்

(கொழும்பு)

மருந்துத் தட்டுப்பாட்டுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து அரசாங்கம் நேரடியாக மருந்துகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது.

உரிய காலத்தில் உரிய மருந்துகளைப் பெற்றுக் கொள்வது, தரமான மருந்துகளை மட்டுமே கொள்வனவு செய்வது என்பவற்றை உறுதி செய்யும் வகையில் மேற்படி நாடுகளுடன் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. இதற்கிணங்க பங்களாதேஷுற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹமனாவுடன் விசேட பேச்சுவார்த்தையை மேற்கொண்டதுடன் அதனையடுத்து மருந்து கொள்வனவுக்கான உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டார். அத்துடன் மிக விரைவில் இந்தியாவுடன் நேரடி மருந்துக்கொள்வனவு தொடர்பில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் சுகாதார அமைச்சுக்கு மருந்துகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நிறுவனங்களின் அசமந்தப் போக்கே நாட்டில் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாகிறது இனிமேல் அரசாங்கம் நேரடியாக அரச மட்டத்தில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிட்டும். நாட்டில் அவ்வப்போது மருந்துகள் தட்டுப்பாடு நிலவுவதும் அதனை வைத்து பலவிதமான பிரசாரங்கள், விமர்சனங்கள் வெளியாவதும் தொடர்கின்றன. இதற்கான அடிப்படைக் காரணமே மருந்துகளைக் கொள்வனவு செய்து வழங்க கேள்விகோரல் மூலம் பொறுப்பேற்ற நிறுவனங்கள் தான். இத்தகைய நிறுவனங்கள் உரிய காலத்துக்கு உரிய மருந்துகளைப் பெற்றுக் கொடுக்கத் தவறி வருகின்றன.

காலதாமதம் இதற்கு முக்கிய காரணமாகிறது. இதே வேளை, சிலசமயம் அத்தகைய நிறுவனங்கள் வழங்கும் மருந்துகள் தரமற்றவையாக உள்ளதால், அவற்றை நிராகரிக்க வேண்டிய நிலை சுகாதார அமைச்சுக்கு ஏற்படுகிறது.

அவ்வாறு நிராகரிக்கப்பட்ட மருந்துகளை மீள் கொள்வனவு செய்து அந்த நிறுவனங்கள் வழங்கும் போது நீண்ட காலதாமதமாகிறது. இதனால்தான் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மீனவருக்கான எரிபொருள் மானியம்
# குறைக்கப்பட்டதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

எரிபொருள் மானியம் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை கடற்றொழிலாளர் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இம்முறை எரிபொருள் மானியத்தில் 10 வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் செயலாளர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். கடற்றொழிலாளர்களுக்கு மார்ச் மாதத்தில் வழங்கப்பட வேண்டிய எரிபொருள் மானியம் இம்மாதமே வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், 10 வீத முத்திரைகள் குறைக்கப்பட்டே இம்முறை கடற்றொழில் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அகில இலங்கை கடற்றொழிலாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. எரிபொருள் மானியத்தை பெறுவதற்கான தகைமையை பெறாதவர்களும் அதனை பெற்றுக்கொண்டதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளதென சம்மேளனத்தின் செயலாளர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிடுகையில் சம்மேளனம் காலத்திற்குக் காலம் முரணான கருத்துக்களை வெளியிடுவதாக தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மானியத்தின் 25 வீதம் தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்றமை தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் எரிபொருள் மானியத்தை நிறுத்துவதற்கான முதற்படியாகவே எரிபொருள் மானியம் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை கடற்றொழிலாளர் சம்மேளனம் அறிவித்துள்ளது.

எரிபொருள் மானியத்தை வழங்குவதற்கு முடியாத பட்சத்தில் எரிபொருள் விலையைக் குறைத்து கடற்றொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்துவதாக சம்மேளனத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் குறிப்பிடுகையில் கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானியத்தை நிறுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத வியாபாரம்
# எட்டு மில்லியன் அறவீடு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் சட்டவிரோதமாக பொருட்களை விற்பனை செய்த மூவாயிரத்து 58 பேருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிடுகின்றது.

குறித்த வர்த்தகர்களிடம் இருந்து அபராதமாக எட்டு மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அதிகவிலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, விலையை காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்காமை போன்ற காரணங்களுக்காக இவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதாக அமைச்சு மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

# பதிவு செய்யாத சிறுவர் இல்லம்
# மூடுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

பதிவு செய்யாத நிலையிலுள்ள சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நன்னடத்தை திணைக்களம் கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

சிறுவர் இல்லங்களை நடத்திச் செல்வதற்கு போதுமான வசதிகள் இல்லாவிட்டால் அந்தக் காப்பகங்களை பதிவு செய்வதற்கான அனுமதியை வழங்க முடியாது என அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு மற்றும் பதிவு செய்வதற்கான அதிகாரம் நன்னடத்தை திணைக்களத்திற்கே உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய உரிய முறையில் நடத்திச் செல்ல முடியாதுள்ள சிறுவர் இல்லங்களுக்கு முன்னறிவித்தல் வழங்கி இரண்டு வாரங்களுக்குள் அவற்றை மூடுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கலந்துரையாடல் நடைபெறமாட்டாது

புதுவருடத்தை முன்னிட்டு கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பிணக்கு தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறுமென மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

(08)

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 33

■ வே. அர்ச்சுனன்





விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவப் பலத்தின் மதிப்பீட்டினை மேற்கொண்டு வந்த பல வெளிநாட்டு ஊடகங்களும், உள்நாட்டு ஊடகங்களும், தங்களால் மதிப்பீடு செய்ய முடியாது எனவும் அந்தளவு தூரத்திற்கு புலிகளின் இராணுவ ரீதியிலான பலம் என்பது மதிப்பிட முடியாத அளவிற்கு மர்மமான முறையில் இருப்பதாகவும் பல ஆய்வாளர்களும் பத்தி எழுத்தாளர்களும் ஊடகங்களும் எழுதிக் கொண்டிருந்த போதிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா பிரிந்ததைத் தொடர்ந்து ஏற்படத் தொடங்கிய இராணுவ ரீதியிலான பலவீனம் பால்ராஜின் இழப்பினைத் தொடர்ந்து பெரியளவிலான பலவீனமாக மாற்றம் கண்டிருந்தது.

பால்ராஜின் இழப்பினை ஊடகங்கள் பெரியளவில் கண்டுகொள்ளாமல் தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் பலமாக இருப்பதாகவும் பால்ராஜின் இழப்பும், ஒரு சாதாரண இழப்புப் போன்றதே எனவும் பால்ராஜ் போன்று இன்னும் பல பால்ராஜ்கள் உருவாகுவார்கள் என விடுதலைப் புலிகளும் பிரசாரங்களை முடுக்கி விட்ட போதிலும் களமுனையில் இருந்த ஒவ்வொரு போராளியும், தளபதியும் பால்ராஜ் போன்று சண்டையை வேறு தளபதிகளால் வழிநடத்த முடியாது என்பதனை அனுபவ ரீதியாகவும் நடந்துகொண்டிருந்த சண்டைகளின் பட்டறிவைக் கொண்டும் உணரத் தொடங்கினர்.

பால்ராஜின் இழப்புக்குப் பின்னர் புலிகள் இயக்கம் மரபு வழித்தாக்குதல் எதிலுமே வெற்றிபெறவில்லை என்பது இங்கு முக்கியமான விடயமாகும். அதாவது மரபு வழித் தாக்குதலாக இருந்தாலும் சரி அல்லது முறையடிப்புத் தாக்குதலாக இருந்தாலும் சரி அல்லது வலிந்த தாக்குதலாக இருந்தாலும் சரி பால்ராஜிற்கு நிகராக எந்தவொரு தளபதியும் தாக்குப் பிடிக்கவும் முடியாது களமுனையை வழிநடத்தவும் முடியாது என்பதை பால்ராஜின் அணியின் கீழ் கடமையாற்றிய போராளிகள் தொடக்கம் ஏனைய தளபதிகளும் உணரத் தொடங்கினர். இதனால் உளவியல் ரீதியாக இந்தப் போராளிகளும், தளபதிகளும் பெரும் நெருக்கடிகளை அல்லது உளவியல் தாக்கங்களை சந்தித்துக் கொண்டிருந்தனர்.

இருந்த போதிலும் தமிழ் ஊடகங்கள் இந்த விடயங்கள் எதையுமே கவனத்திற் கொள்ளாமல் தங்களது எண்ணம் போலவும் தங்களது கற்பனைத் திறனுக்கு ஏற்பவும் எழுதிக் கொண்டிருந்தனர். ஆனால் களமுனைகளில் நின்ற புலிப் போராளிகளுக்கு மட்டும்தான் சண்டையின் வலியும், அதன் சாதக பாதகங்களும் தெரியத்தொடங்கியது. இவ்வாறு அனைத்து வழிகளிலும் புலிகள் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்தது. அதாவது கிளிநொச்சி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலப்பகுதியில் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை இயக்கம் இழந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்ச்செல்வன், பால்ராஜ், கருணா என புலிகள் இயக்கத்தின் பிரதான தளபதிகளின் பிரிவும், இழப்பும் புலிகளிற்கு சகல வழிகளிலும் நெருக்கடிகளை கொடுத்துக்கொண்டிருந்தன.

அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு தொடர்பில் தகவல் அறிந்ததும் பிரபாகரன் கண்ணீர் விட்டுக் கதறி அழுதபோது அவரை சமாதானப்படுத்த பொட்டம்மானும், தமிழ்ச்செல்வனும் படாதபாடு பட்டனர். அந்தளவிற்கு புலிகள் இயக்கம் நெருக்கடிகளை சந்தித்த போதெல்லாம் அரசியல் ரீதியாகவும், சர்வதேச அணுகுமுறைகளையும் அவதானித்து பாலசிங்கம் நெருக்கடிகளில் இருந்து காப்பாற்றி இருக்கின்றார். பல சமயங்களில் பிரபாகரனுடன் முரண்பட்டுக்கொண்டு ஒதுங்கியும் இருந்திருக்கின்றார். இவ்வாறு கடைசிக் கால கட்டத்திலும் பிரபாகரனுடன் முரண்பட்ட போதிலும் இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவு என்பது பெரிய இடைவெளி உடைய உறவாக இருந்தது கிடையாது. அதாவது கணவன் மனைவிக்குள் ஏற்படுகின்ற சண்டை போன்று ஒரு கட்டத்தில் கோபித்துவிட்டு மீண்டும் உறவாடுவதே இவர்களின் பாணியாக இருந்தது.

இதைவிட பாலசிங்கம் இல்லாமல் பிரபாகரனால் சர்வதேச அரசியலை முன்னெடுக்க முடியாத நிலைமையே இருந்து வந்தது. இதை நடைமுறையில் பின்நாட்களில் புலிகள் இயக்கமும், உணர்ந்து கொண்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மதுப் பழக்கம், புகையிலை பாவித்தல், சிகரெட் பாவித்தல் போன்றவை முற்றாக தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் பாலசிங்கத்திற்கு மட்டும் பிரபாகரனால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பாலசிங்கம் தனது மனதில் பட்டதை வெளிப்படையாகவே கூறிவிடுவார். ஒரு தடவை பிரபாகரன், பொட்டம்மான், சூசை, தமிழ்ச்செல்வன் போன்றோருடன் உரையாடிக்கொண்டிருந்த பாலசிங்கம் தனக்கு உடனடியாக ஒருபனைக் கள்ளு வேண்டுமென்று அடம்பிடிக்கத் தொடங்கினார். இதனால் பிரபாகரன், பொட்டம்மான் போன்றோர் எரிச்சல் அடைந்தபோதிலும் பாலசிங்கம் அவர்களின் எரிச்சலைப் பொருட்படுத்தாமல் உங்களால் முடியாவிட்டால் நான் வெளிப்படையாகவே போய் தவறணையில் வாங்கி வந்துவிடுவேன் என்று நகைச்சுவை கலந்த தொனியில் கூறிவிட்டார். எதற்குமே சிரித்தமுகத்துடன் காட்சிதரும் தமிழ்ச்செல்வன் இதற்கும் சிரித்துக்கொண்டு நின்றபோது பிரபாகரன் தமிழ்ச்செல்வனை முறாய்த்துப் பார்த்துவிட்டு பொட்டம்மானிடம் ஏற்பாடு செய்யுமாறு பணித்துவிடுகிறார்.

இதனை அடுத்து வட்டக்கச்சியில் உள்ள புலிகளின் உதவியாளர் ஒருவர் மூலமாக பாலசிங்கத்திற்கு ஒருபனைக் கள் எடுத்துவரப்படுகிறது. கள்ளைக் கண்டவுடன் பாலசிங்கம் இவர்களுக்கு காலமைக்கு சந்திப்போம் என்று கூறிவிட்டு அவர்களின் பதிலுக்குக் கூட காத்திருக்காமல் எழுந்து, சென்று வட்டக்கச்சியில் உள்ள புலிகளின் பண்ணை முகாம் ஒன்றில் பெரிய மாமர நிழலில் இருந்து பனங்கள்ளை குடித்துக்கொண்டிருந்த பொழுது நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பாலசிங்கத்துடன் பேசுவதற்காக தொலைபேசித் தொடர்பிற்கு வந்தார். பாலசிங்கம் நிதானமாக பேசி புலிகள் பிரதிநிதிகளுக்கும் நோர்வே தூதுக் குழுவினரிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்கிறார்.

இந்தச் சம்பவங்கள் அரசாங்கத்திற்கும், புலிகள் இயக்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் பாலசிங்கம் வன்னிக்கு வந்த ஒரு சந்தர்ப்பத்திலேயே இடம் பெற்றது. இதன்பின்னர்தான் பாலசிங்கத்திற்கும் பிரபாகரனிற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு பாலசிங்கம் நோய்வாய்ப்பட்டு இறக்கவும் நேரிட்டது. இவ்வாறு பாலசிங்கம் பிரபாகரனுடன் முரண்பட்டுக்கொண்டிருந்த போதிலும் புலிகள் இயக்கத்திற்கு இராஜதந்திர ரீதியிலான நெருக்கடிகள் வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த நெருக்கடிகளைக் களைவதிலும், அந்த நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கான முனைப்புகளையும் பாலசிங்கம் இறுதிவரைக்கும் மேற்கொண்டே வந்தார்.

ஆனால், பாலசிங்கம் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கடுப்புடனேயே இருந்து வந்தனர். ஏனெனில் பாலசிங்கம் நக்கலாக வெளிப்படையாக இவர்களை ஒவ்வொரு சந்திப்பின்போதும் பேசிக்கொள்வது இவர்களுக்கு பிடிக்காத ஒரு விடயமாகவே இருந்துவந்தது. இதைவிட கூட்டமைப்பின் பிரதிநிதிகளை இலண்டனில் இருந்தவாறு தொலைபேசியில் தொடர்புகொள்ளும் பாலசிங்கம் நக்கல் நையாண்டி கலந்த தொனியிலேயே இவர்களுடன் உரையாடி வந்தார். ஒருதடவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர். இரா.சம்பந்தனை தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடிக்கொண்டிருந்த பாலசிங்கம் திடீரென சம்பந்தனிடம் உங்கட ஆள் என்ன செய்கிறா இப்ப? இப்பவும் தொடர்பில் இருக்கிறீர்களா, என்று கேட்டபொழுது சம்பந்தன் திக்குமுக்காடிவிட்டார்.

சம்பந்தனின் அந்த ஆள் யார்? அந்த குறித்த பெண்ணிற்கும் சம்பந்தனிற்கும் என்ன தொடர்பு? அதை தமிழ் ஊடகங்கள் தெரிந்து கொண்டனவா? அந்த விடயத்தை ஏன் பாலசிங்கம் சம்பந்தனிடம் நக்கலாக கேட்டார்? என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்..

(தொடரும்)

பாலசிங்கம் நக்கலாக வெளிப்படையாக இவர்களை ஒவ்வொரு சந்திப்பின்போதும் பேசிக்கொள்வது இவர்களுக்கு பிடிக்காத ஒரு விடயமாகவே இருந்துவந்தது. இதைவிட கூட்டமைப்பின் பிரதிநிதிகளை இலண்டனில் இருந்தவாறு தொலைபேசியில் தொடர்புகொள்ளும் பாலசிங்கம் நக்கல் நையாண்டி கலந்த தொனியிலேயே இவர்களுடன் உரையாடி வந்தார். ஒருதடவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர். இரா.சம்பந்தனை தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடிக்கொண்டிருந்த பாலசிங்கம் திடீரென சம்பந்தனிடம் உங்கட ஆள் என்ன செய்கிறா இப்ப? இப்பவும் தொடர்பில் இருக்கிறீர்களா என்று கேட்டபொழுது சம்பந்தன் திக்குமுக்காடிவிட்டார்.

# முஸ்லிம்களுக்கு எதிரான அநீதி இடம்பெற அனுமதிக்க முடியாது

## பாதுகாப்புச் செயலர் உறுதியளிப்பு



முஸ்லிம்களுக்கு எந்த ஒரு அநீதியும் இடம் பெறுவதை நாம் அனுமதிக்க மாட்டோம். முஸ்லிம்கள் எவ்வித அச்சமும், பீதியும் கொள்ளத் தேவையில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துக கலந்துரையாடும்போதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நானும் ஜனாதிபதியும் முஸ்லிம்களுக்கெதிராக செயற்படுவதாகவும் பொதுபலசேனாவுக்கும் எமக்கும் தொடர்புள்ளதாகவும் சிலர் பொய்ப்பிரசாரம் செய்கின்றனர். ஆனால் ஹலால் தொடர்பான பிரச்சினைகளை அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையுடன் பேசி சுமூகமான தீர்வுக்கு 'கொண்டு வந்துள்ளோம்.

முஸ்லிம்களுக்கெதிராக சிலரினால் மேற்கொள்ளப்படவிருந்த பல்வேறு எதிர்ப்பு நடவடிககைகளைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.

ஒரு போதும் முஸ்லிம்களுக்கெதிராக நாம் செயற்படவில்லை. எந்த ஒரு அநீதியும் முஸ்லிம்களுக்கெதிராகவோ வேறு எந்தவொரு சிறுபான்மை சமூகத்திற்கெதிரா கவோ இடம் பெறுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட் டோம்.

கிழக்குக்கு வெளியே சில பிரதேசங்களில் சிறிய சில சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றை நாங்கள் உடனுக்குடன் தடுத்து நிறுத்தியுள்ளோம்.

பெஷன் பக் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடரபில் உடனடியாக நான் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணித்ததுடன் அந்தச் சம்பவத்தில் ஈடுபடடோரைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஜனாதிபதி சிறுவயது முதலே முஸ்லிம்களுடன் நெருக்கமாக பழகியதுடன்முஸ்லிம் நண்பர்களுடன் அதிகளவு உறவை வைத்துள்ளவர்.

ஜனாதிபதி பலஸ்தீனத்துடன் நெருக்கமான நட்புறவு வைத்துள்ளவர். ஜனாதிபதிக்கும் பலஸ்தீனத்துக்கும் ஆரம்பம் தொட்டே இன்று வரையும் ஒரு இறுக்கமான உறவும், பிணைப்பும் உள்ளது.

அதே போன்று எங்களுக்கு ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகள் செய்த உதவியை நாங்கள் என்றும் மறக்க முடியாது. பாகிஸ்தான் நாங்கள் கேட்கும் போதெலலாம் உதவியது. எங்களுக்கு எப்போதும் பாகிஸ்தான் உதவத் தயாராக உள்ளது.

முஸ்லிம்களுக்கு எந்தவொரு பிரச்சினையும் ஏற்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம். முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் முழுமையாக கவனமெடுத்து செயற்பட்டுள்ளோம்.

சிற்சிறிய சம்பவங்களை ஒரு சில இணையத்தளங்களும், குறுஞ் செய் திகளும் (எஸ். எம்.எஸ்.)திரிபுபடுத்தி பெரிதாக்குகின்றன.

இந்த விடயங்களில் நாம் கவனமாக இருப்பதுடன் நீங்கள் பொறுப்புள்ளவர்கள் என்ற வகையில் உங்களின் பிரதேசங்களுக்கு சென்று விடயங்களை தெளிவு படுத்துங்கள்.

முஸ்லிம்கள் அச்சமோ,பீதியோ கொள்ள வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்பதையும் சமூகத்தின் மத்தியில் கூறுங்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

இவ் உயர்மட்ட சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி ,ஏறாவூர்,ஓட்டமாவடி ஆகிய முஸ்லிம் சம்மேளனங்கள் மற்றும் உலமா சபை பிரதிநிதிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கிழக்குப் பிராந்திய காரியாலயப் பொறுப்பாளர் ஜுனைட் நளீமி,இராணுவ உயரதிகாரிகள்,மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## சாட்சிகளைப் பாதுகாக்க விசேட சட்ட மூலம் அறிமுகம்

சாட்சிகளைப் பாதுகாக்கும் விசேட சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பாலியல் வன்கொடுமை, கொள்ளை, கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் சாட்சியளிப்போருக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களைத் தடுக்கும் நோக்கில் புதிய சட்டம் அமுல்ப்படுத்தப்படவுள்ளது.

சாட்சியாளர்களை அச்சுறுத்தி வழக்கைத்திசை திருப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் தரப்பினரையும் பாதுகாக்கும் நோக்கில் சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமொன்று அமுல்ப் படுத்தப்படவுள்ளது.

இந்த உத்தேசச் சட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதாகவும்,விரைவில் இந்த சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிங்கள - பௌத்த குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுத் திட்டம்

சிங்கள-பௌத்த குடும்பங்களுக்கு 25,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. தாய்நாட்டைப் பாதுகாக்கும அமைப்பினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட சிங்கள பௌத்த குடும்பங்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட உள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் முத்தட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஐந்து பிள்ளைகளைக் கொண்ட சிங்கள-பௌத்த குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளிகள் பணம் வழங்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வெசாக் பௌர்ணமி தினத்தன்று தெரிவு செய்யப்பட்ட 25 சிங்கள-பௌத்த குடும்பங்களுக்கு தலா 25,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்தக் குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக மாதாந்தம் தலா 25,000 ரூபா வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள-பௌத்த குடும்பங்களை போசிக்கும் நோக்கில் இவ்வாறு நிதி உதவி வழங்கப் படவுள்ளது.

## பயணிகளிடம் அதிக கட்டணம் அனுமதிப்பத்திரம் இரத்தாகும்

பண்டிகைக் காலத்தில் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகளிடம் அதிக பணம் அறவிடும் தனியார் பேருந்துகள் குறித்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் குறித்த பேருந்துகளின் வீதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தனியார் பேருந்துகளில் செல்லும் பயணிகளின் வசதிகள் குறித்து தேசிய போக்குவரத்துச் சபையின் தலைவர் ரொஷான் குணவர்த்தன நேற்றுமுன்தினம் புறக்கோட்டை பேருந்து நிலையத்திற்குச் சென்று ஆராய்ந்தார்.

## பொருளாதார நலன்சார்ந்தே அவுஸ்ரேலியாவிற்கு படையெடுப்பு

### – தூதுவர் திசரசமரசிங்க

அதிகளவான புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியா நோக்கிப்படையெடுப்பதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவுஸ்ரேலியாவிற்கான இலங்கைத் தூதுவர் அட்மிரால் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் பேர்த் நகரிற்கு அருகாமையில் துறைமுகத்தைச் சென்றடைந்த 66 இலங்கையர்களும் விரைவில் திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவர்களை மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்களாகக் கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோருவோர் பொருளாதார நோக்கங்களைக் கொண்டவர்கள் எனவும், வேறு எந்தக் காரணிகளும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையுமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர் படகுகளை தடுத்து நிறுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் பாரியளவில் பணத்தைச் செலவிட்டு வருவுதாகக் குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தினால் புகலிடக் கோரிக்கையாளர் பயணங்களை முற்று முழுதாக தடுக்க முடியம் என திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.



## மின்சாரத்துறையில் தலையிட அமெரிக்காவிற்கு அதிகாரமில்லை

இலங்கையின் மின்சாரத்துறை குறித்து பேச்சுவார்ததை நடத்த அமெரிக்காவுக்கு அதிகாரம் இல்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் ஓமல்பே சோபித தேரர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே சிசோன அண்மையில் இலங்கையின் மின்சார கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் மின்சார சபையுடன் பேச்சுவார்த்தை நடத்த கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் இது தொடர்பில் வெளியுறவுகள் துறை அமைச்சின் ஆலோசனையைப் பெற வேண்டும் என மின்சார சபை தெரிவித்திருந்தது. எவ்வாறாயினும் உள்நாட்டு மின்சார மற்றும் எரிபொருள் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்கு அமெரிக்காவுக்கு அதிகாரம் இல்லை என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்

## உள்நாட்டு ரீதியான அரசியற் தீர்வே பொருத்தம்

### – அமைச்சர் டி.யூ.கூறுகிறார்

இலங்கைக்கான அரசியற் தீர்வை, இலங்கையே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் டி.யூ குணசேகர வலியுறுத்தியுள்ளார். திகன பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமே இறுதி அரசியற் தீர்வினை முன் வைக்க வேண்டும். மாறாக சர்வதேச நாடுகள் இந்த விடயத்தில் அழுத்தங்களை கொடுக்கக் கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு விடயங்களில் அழுத்தங்களைப் பிரயோகித்து, அவர்களுக்கு ஏற்றாற்போல் தீர்வினை இலங்கை மீது திணிக்கும் அதிகாரம், சர்வதேச நாடுகளுக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிய பசுபிக் திட்ட ஒத்துழைப்பு அமெரிக்க குழு இலங்கை வருகை

### ஐ.தே.க. தெரிவிப்பு

அமெரிக்கா காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஆசிய பசுபிக் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளதாகவும், இதன் காரணமாக இந்த ஆண்டில் இரண்டு காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஆசிய பசுபிக் திட்டத்திற்கு ஆதரவளிக்கப்படும் என இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னதாக குறித்த உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.



# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# இந்திய அரசின் உதவிகள் அளப்பரியது

(கிளிநொச்சி)

இந்தியா எப்பொழுதும் பதிக்கப்பட்ட மக்களுக்கு நெருக்கமாக நின்று பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது என ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 1230 வர்த்தகர்களுக்கு வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி உதவிகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த நாடும் செய்யாத உதவிகளை போரினால் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு இந்திய அரசு செய்து வருகின்றது. இதற்காக போரினால் பாதிகக்கப்பட்ட மக்கள் சார்பாக இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அழிந்து போன பிரதேசங்களின் அபிவிருத்திக்கு இந்தியா பலவகையான உதவிகளைச் செய்து வருகிறது. இதில் மிகப் பெரும் உதவியாக எமது மக்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட ஐம்பதாயிரம் வீடுகளாகும். அது மட்டுமன்றி கிளிநொச்சியில் பொறியியல் பீடம் அமைப்பதற்காக இந்தியா 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. இவையெல்லாம் இந்திய அரசு எமக்கு வழங்குகின்ற மிகப்பெரும் கொடையாகும்.

இன்றும் இந்திய அரசு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 1230 வர்த்தகர்களுக்கு அவர்களின் அழிந்து போன வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கான உதவிகளை வழங்குகிறது.

இதற்காக இந்திய அரசு 650 இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்திருக்கின்றது. அழிந்து போன எமது பிரதேசங்கள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். அதற்காக இந்தியா தொடர்ந்தும் தனது உதவிகளை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்

இந்நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலாளர் பி.எஸ்.ராகவன் இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கம், இந்திய துணைத் தூதரகத்தின் முதல் செயலாளர் ஜஸ்டின்மோகன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இலக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

உயர்கலை இலக்கிய சங்கத்தின் இலக்கிய சந்திப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'பிறமொழித் திரைப்படங்களும், தமிழ்த் திரைப்படங்களும்' என்னும் விடயம் பற்றி கோ.கேதாரநாதன் உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து வேதநாயகம் தபேந்திரனின் 'பூத்திடும் பனந்தோப்பு' நூல் அறிமுக உரையை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர் பூ.நகுலன் வழங்கவுள்ளார். (17)

## வளலாய் கிராம மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வளலாய் கிராம மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட இக்கிராம மக்களுக்குத் தற்போது இந்தியன் வீட்டுத்திட்டத்திற்கென பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வீட்டுத்திட்டப் பணிக்கென கட்டம் கட்டமாக பணக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பயனாளிகளுக்கான பணம் சம்பத் வங்கியூடாகவே வழங்கப்பட்டு வருவதுடன், இவ்உதவியின் ஊடாக மக்கள் வீட்டுத்திட்டப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தியன் வீட்டுத்திட்டம் தமக்கு வழங்கப்பட்டுள்ளமையால் அழிவடைந்த தமது வீடுகளை மீண்டும் அமைக்கக்கூடியதாக உள்ளதாகவும், இதனால் தாம் பெரும் நன்மையடைந்துள்ளதாகவும் இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.


## கூட்டுறவுச் சங்கக் கிளைகளை நாளாந்தம் திறக்க நடவடிக்கை

மானிப்பாய் பல.நோ. கூட்டுறவுச் சங்கக் கிளைகள் வியாபார நடவடிக்கைகளுக்காக கடந்த 8 ஆம் திகதி முதல் இனிவரும் நாட்களில் கட்டாயமாகத் திறந்திருக்க வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சங்க கிளைக் குழுத் தலைவர், செயலர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன் போதே குறித்த திகதிக்குப் பின்னர் நாளாந்தம் காலை 8.30 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது சங்கத்தின் தலைவர் ச.திருநாவுக்கரசு, கிளைகள் நாளொன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாது வியாபாரம் செய்ய வேண்டும் எனவும், மாதாந்தம் இரண்டரை இலட்சம் ரூபாவை வருமானமாகக் காட்டவேண்டும் எனத் தெரிவித்தார்.

சங்கத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும், கிளையின் வியாபார நடவடிக்கை தொடர்பாகவும், ஆராய்ந்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)



பருத்தித்துறை நகரசபை வரியிறுப்பாளர் சங்கத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிவா.கிருஸ்ணமூர்த்தி பதவியைப் பொறுப்பேற்கும் வைபவத்தில் உரையாற்றுவதையும், அருகில் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் சட்டத்தரணி சபா.இரவீந்திரன், வரியிறுப்பாளர் சங்கச் செயலாளர் எஸ்.இருதயராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (01)

## சமுர்த்திச் சந்தையில் அதிக மக்கள் பங்கேற்பு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடத்தப்பட்ட சமுர்த்திச் சந்தையில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு உள்ளூர் உற்பத்திப்பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்தனர்.

இங்கு பனையோலைப் பொருட்களாலான சுளகு, பெட்டி, கடகம் மற்றும் பொம்மைகள், உடுபுடவைகள், அழகு சாதனப் பொருட்கள், உள்ளூர் மரக்கறிகள், றோசா உள்ளிட்ட பூக்கன்று வகைகள் என்பனவற்றை மக்கள் விரும்பிப் பெற்றுச் சென்றனர். (104)

## முரசின் இன்றைய பலன்

(13.04.2013 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி.
நட்சத்திரம் கார்த்திகை. முன்இரவு 3.30 வரை. திதி திருதியை முன்இரவு 7.08 வரை. இராகுகாலம் 09.06 - 10.36 வரை.
சுபநேரம் 03.06 - 4.36 வரை.அமிர்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — நண்பர் விடும் குறையை பெரிதாக எடுக்க வேண்டாம். ஆர்வ உழைப்பால் தொழில், சீர்பெறும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். தாய்வழியில், நம்பிக்கைச் செய்தி. எதிர்பார்த்திருந்த செயல் ஒன்று வெற்றிகரமாக நடந்தேறும். ஜெயம்.

**ரிஷபம்** — கவனக்குறைவால் மனதில் பதற்றம் வரும். முக்கியமான செயல் தாமதம். தொழில், வரும் அனுகூலத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். பண இழப்பு. சேமிப்பு செலவுக்கு பயன்படும். உடல்நலத்திற்கு உணவில் கவனம். தெம்பு தரும் வெளியூர்ச் செய்தி.

**மிதுனம்** — நண்பருடன் முக்கிய ஆலோசனை நடத்துவீர்கள். முடியாதிருந்த பணியை, நிறைவேற்ற புதிய வழி பிறக்கும். தொழில் வளர்ச்சிக்கு அனுகூல பலம். கொடுத்த கடன் திரும்பும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். பயண வாய்ப்பும் உண்டு.

**கடகம்** — உண்மை, நேர்மை பின்பற்றுவீர்கள். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். அதிக உழைப்பால் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம். குடும்பத்தேவைக்கு தாராள செலவு செய்வீர்கள். உறவினர் உங்களை கொண்டாடுவர். அமைதி மனநிலை.

**சிம்மம்** — ஒதுக்கி வைத்த பணியை நிறைவேற்றுவீர்கள். வியத்தகு நன்மையால், மகிழ்ச்சி. தொழில் வளர்ச்சி திருப்திகரம். பணவரவு முன்னேற்றம். சொத்து வாங்க அனுகூலம். எதிர்கால வளர்ச்சிக்குத் திட்டமிடுவீர்கள். உல்லாசப் பயணமும் கொண்டாட்டமும்.

**கன்னி** — சிலர், உங்கள் மனதை கஷ்டப்படுத்தலாம். அவபெயர் வராமல், செயல்படுவது நல்லது. தொழில், திறமையை பயன்படுத்த செழிப்பு. தவிர்க்க இயலாத பணச் செலவு ஏற்படும். வெளியூர் பயணத்திட்டத்தில், மாறுதல். மன சங்கடம் பிள்ளைகளால் தீரும்.

**துலாம்** — பகைமையாளர்களால் நெருக்குதல். விட்டுக்கொடுக்க மாட்டீர்கள். மாற்று உபாயத்துடன் செயல்படுவீர்கள். தொழில், தாமத கதியில் இயங்கும். சிறு பணக்கடன். வாகன பயணத்தில் கவனம். குடும்பத்தில் சச்சரவு வந்து விலகும். தாயின் ஆசி.

**விருச்சிகம்** — உங்கள் தனித் திறமையால் எண்ணியது முடிப்பீர்கள். தொழில், வியத்தகு முன்னேற்றம் பெறும். அதிக பணவரவால், மிகுந்த சந்தோஷம். வழிபாடு நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பதவி அனுகூலம். தொட்டது துலங்கும்.


**தனுசு** — இளமைக்கால நினைவுகளில் மகிழ்வீர்கள். மனம், செயலில் புத்துணர்வு. தொழில், செழிக்க அதிக பணி புரிவீர்கள். தார்ாள பணவரவு. அரச விவகாரங்களில் சாதகம் உருவாகும். உறவினர்களுடன் குலாவுதலில் இன்பம். மாணவர்க்கு நன்மை.

**மகரம்** — மனதில் இனம் புரியாத வருத்தம் ஏற்படலாம். நிதானமும், பொறுப்புணர்வும் உங்களை முன்னேற்றும். தொழிலில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சிக்கனம், சிரமம் தவிர்க்க உதவும். இசையில், மனம் இலகுவாகும். குடும்பத்தினர் அன்பு.

**கும்பம்** — அறிவாற்றல் சிறந்து, பிறரிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். திட்டமிட்ட பணி இலகுவாக நிறைவேறும். தொழில் சிறக்க, எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாராள பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு, சலுகையும் உயர்வும். பிள்ளைகளால் பெருமை.

**மீனம்** — மாறுபட்ட கருத்து உள்ளவரிடம், வலிய பேச வேண்டாம். உடல்நலத்தில் கவனம். தொழில், புதுமுயற்சி வெற்றி பெறும். பிறருக்கு காட்ட செலவு செய்வதை தவிர்க்கவும். மாணவர்கள், சாகச விளையாட்டு வேண்டாம். நண்பர் உயர்வுக்கு உதவுவர்.

# தென்னாபிரிக்க வீரர்கள் அசத்தல்




(ஜோகனஸ்பேர்க்)

விஸ்டன் விருதுக்கான ஐந்து பேர் கொண்ட பட்டியலில் தென்னாபிரிக்காவின் அம்லா, கலிஸ், ஸ்ரெயின் ஆகிய மூன்று வீரர்கள் இடம் பெற்று அசத்தினர்.

இங்கிலாந்தில் வெளிவரும் கிரிக்கெட் சம்பந்தமான பத்திரிகை விஸ்டன் அல்மனாக். இதன் சார்பில் கிரிக்கெட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டுக்கான சிறந்த வீரர்களாக ஐந்து பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் தென்னாபிரிக்க அணியின் அம்லா, கலிஸ், வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெயின் ஆகிய மூன்று பேர் இடம் பெற்று அசத்தினர். தவிர, மேற்கிந்தியத்தீவுகளின் சாமுவேல்ஸ், இங்கிலாந்து அணியின் கம்ப்டனும் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

விஸ்டன் விருதுக்காக ஒரே அணியில் இருந்து மூன்று வீரர்கள் இடம் பெறுவது, 150 ஆண்டு கால தென்னாபிரிக்க கிரிக்கெட் வரலாற்றில் இது மூன்றாவது முறை.

இதற்கு முன், 1966இல் கிறீம் பொலக், பீற்றர் பொலக், கலின் பிலாண்ட், 2009இல் டேல் பென்கென்ஸ்டீயன், மார்க் பௌச்சர், நீல் மெக்கன்சி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

# பார்சிலோனா தகுதி



(பாரிஸ்)

சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் அரையிறுதிக்கு பார்சிலோனா அணி தகுதி பெற்றது.

ஐரோப்பா சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடர், இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதன் காலிறுதி இரண்டாவது சுற்றுப் போட்டியில் பார்சிலோனா, பாரிஸ் செயின்ட் – ஜெர்மெய்ன் அணிகள் மோதின.

பாரிஸ் அணியின் சேவியர் (50ஆவது நிமிடம்), பார்சிலோனாவின் பெட்ரோ (71ஆவது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடிக்க போட்டி 1–1 என, சமநிலையானது. இந்த அணிகள் ஏற்கனவே மோதிய காலிறுதி முதல் சுற்றும் (2 – 2) சமநிலையானது.

அந்நிய மண்ணில் அதிக கோல் அடித்ததன் அடிப்படையில், பார்சிலோனா அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. பேயர்ன் முனிக், ரியல் மட்ரிட், டார்ட்மண்ட் அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறின.

# தலைவர்களுக்கு எச்சரிக்கை



கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் கௌதம் கம்பீர், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவர் விராத் கோலி ஆகியோருக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஐ.பி.எல் விதிகளை மீறியமைக்காகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கும் நைட் ரைடர்ஸ் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் விராத் கோலி ஆட்டமிழந்ததையடுத்து இருவரும் மோதிக் கொண்டனர்.

ஒரு கட்டத்தில் இருவரும் உடல் ரீதியாக மோத முற்பட்டபோது, சக வீரர்களால் இருவரும் தடுத்து நிறுத்தப்பட்டதோடு, விராத் கோலி மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய அப் போட்டியின் போட்டி மத்தியஸ்தர் டேவிட் பூண், இரண்டு தலைவர்களும் முதல்நிலைக் குற்றத்தை மேற்கொண்டதை ஒப்புக்கொண்டதாகவும் அதன் காரணமாக இருவரும் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாகவும் அறிவித்தார்.

இதில் இன்னொரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், மல்லுக்கட்டிய கம்பீர், கோலி, அவர்களை சாந்தப்படுத்திய ரஜத் பாட்டியா மூன்று பேரின் சொந்த மாநிலம் டில்லி தான். கம்பீரும், விராட் கோலியும் இந்திய அணிக்காக மட்டுமின்றி மாநில அணியான டில்லி, வடக்கு மண்டலம், ஓ.என்.ஜி.சி. அணிக்காக இணைந்து விளையாடி வருகிறார்கள். நண்பர்கள் போல் பழகி வந்தாலும் களத்தில் இப்படி மோசமாக நடந்து கொண்டது பலரையும் ஆச்சரியப்பட வைத்தது.

ஆட்டம் முடிந்ததும் இந்த விவகாரம் குறித்து கம்பீரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், அந்தச் சமயத்தில் ஒரு வேகத்தில் நடந்து விட்டது அவ்வளவு தான். அது மைதானத்துடன் முடிந்து போன விடயம். அதை களத்திற்கு வெளியே கொண்டு செல்வது தேவையற்றது என்றார். கோலி கூறும் போது, என்ன நடந்ததோ? அது களத்துடன் முடிந்து போனது. மற்றபடி இந்த ஆட்டம் மிகச் சிறப்பாக அமைந்தது என்றார்.



# முன்னேற்றம்

(மொஸ்கோ)

சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் அரையிறுதிக்கு செல்சி அணி முன்னேறியது.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் இரண்டாவது காலிறுதிப் போட்டி மொஸ்கோவில் நடந்தது. இதில் செல்சி, ருபின் கசான் அணிகள் மோதின.

முதல் பாதியில் (5ஆவது நிமிடம்) செல்சி அணியின் டோரஸ் ஒரு கோல் அடித்தார். விறுவிறுப்பான இரண்டாவது பாதியில் (51ஆவது நிமிடம்) ருபின் கசான் அணியின் இவான் ஒரு கோல் அடித்தார். இதற்கு, (55ஆவது நிமிடம்) செல்சி அணியின் விக்டர் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார்.

தனது ஆதிக்கத்தை தொடங்கிய ருபின் கசான் அணிக்கு கோக்டெனிஸ் (62ஆவது நிமிடம்), பிபார்ஸ் (75ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடிக்க, வெற்றி உறுதியானது. முடிவில், செல்சி அணி 2-3 என தோல்வியடைந்தது.

இருப்பினும், முதல் காலிறுதிப் போட்டியில் செல்சி அணி (3-1) என வெற்றி பெற்றிருந்தது. எனவே கோல்கள் அடிப்படையில், செல்சி அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

# முடிந்ததா? சர்வதேச ஆட்டம்



(லண்டன்)

சேவாக்கின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் ஜெப்ரி போய்கொட் கருத்து தெரிவித்துள்ளார்.

சிலர் தானாகவே ஓய்வு பெறுவார்கள். சிலர் தேர்வாளர்களால் ஓய்வு அளிக்கப்படுவார்கள். எதுவாக இருந்தாலும் வேதனை அளிக்கும் விடயம் தான். இந்திய அணிக்காக சேவாக்இனி மேல் ஒருபோதும் விளையாட முடியாது. இந்திய அணி சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்திய அணியின் தேர்வாளர்கள் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க எடுத்திருக்கும் முடிவு பாராட்டுக்குரியதாகும்.

2015ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டிக்கான அணியை வலுப்படுத்த வேண்டுமானால் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டியது முக்கியமானது. ஆட்டத்துக்கு வயது முக்கியம் கிடையாது. ஆட்டத்திறன் தான் முக்கியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆலோசனை பெருமை



ஐ.பி.எல்., தொடரில் விளையாட முடியாமல் போனாலும், அணியின் ஆலோசகராக இருப்பதில் பெருமை அடைகிறேன் என ஹைதராபாத் அணியின் ஆலோசகர் லக்ஸ்மன் தெரிவித்துள்ளார். கிரிக்கெட் போட்டியின் மூலம் நிறைய விடயங்களைக் கற்றுக் கொண்டேன். நான் கற்றுக் கொண்ட விடயங்களை, அணியின் ஆலோசகர் என்ற முறையில் இளம் வீரர்கள் மூலம் மீண்டும் கிரிக்கெட்டுக்கு கொடுப்பதில் மகிழ்ச்சியாக உள்ளது. ஆலோசகர் என்பது அனுபவத்தை வீரர்களுடன் பகிர்ந்து கொள்வது. வர்ணனையாளர் என்பது அனுபவத்தை இரசிகர்கள் அல்லது பார்வையாளர்களிடம் பகிர்ந்து கொள்வதாகும்.

எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், சிறந்த இளம் வீரர்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. போட்டியில் விளையாடிய காலத்திலும், அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு கிரிக்கெட் குறித்த நிறைய விடயங்களைக் கற்றுக் கொடுத்துள்ளேன். இதனால் ஆலோசகர் பணி எளிதாக உள்ளது.இளம் வீரர்களின் திறமைக்கேற்ப பயிற்சி வழங்கி, சிறந்த வீரர்களாக உருவாக்குவதே இலக்கு. எதிரணியின் பலம், பலவீனம், ஆடுகளத்தின் தன்மைக்கேற்ப ஒவ்வொரு போட்டியிலும் விளையாடும் 11 பேர் கொண்ட அணி தேர்வு செய்யப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

Season 6

IPL

மும்பை இந்தியன்ஸ் எதிர்
புனே வாரியர்ஸ்
இடம்: மும்பை
மாலை 4.00 மணி

சென்னை சூப்பர் கிங்ஸ் எதிர்
பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்
இடம்: சென்னை
மாலை 8.00 மணி

# கீர்த்திகன் நினைவு மென்பந்து; கிண்ணம் ஞானம்ஸ் வசம்



(கோண்டாவில்)

கோண்டாவில் ஏ.பி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கீர்த்திகன் நினைவு மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி ஞானம்ஸ் அணி கைப்பற்றிக்கொண்டது.

அணிக்கு 11 பேர் கொண்ட இம்மென்பந்துக் கிரிக்கெட் போட்டி 16 ஓவர் களைக்கொண்டதாக இடம்பெற்றது. யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி மென்பந்து கிரிக்கெட் அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கலைவாணி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து குருநகர் கார்மல் போய்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கார்மல் போய்ஸ் அணி 16 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தேசிகன் 24 சாந்தன் 11, அலன்போர்டர் 8, சுபதாஸ் மற்றும் அஜன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரஜீவன் 3, அனுரதன், குணதீபன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 86 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஞானம்ஸ் அணி 15.4 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 87ஓட்டங்களைப் பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதில் ரஜீவன் 18, துவாரகன் 15, துஸ்யந்தன் 14, நவகீதன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துசாந் மூன்று, புலேந்திரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியைச்சேர்ந்த ரஜீவன், தொடர் நாயகனாக கார்மல் போய்ஸ் அணியைச் சேர்ந்த அயன், சிறந்த களத் தடுப்பாளராக கார்மல் போய்ஸ் அணியைச் சேர்ந்த சுபதாஸ், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக உதயசூரியன் அணியைச் சேர்ந்த கபிசாந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எஸ்.பி.)

விளையாட்டுச் செய்திகள்

# போராடித் தோற்றது யாழ். மாவட்டம்

(வவுனியா)

வடமாகாண கால்பந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட அணி சம்பியனாகியது.


வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டங்களின் ஆண்கள் கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் யாழ். மற்றும் மன்னார் மாவட்ட அணிகள் மோதின. முதல் பாதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணி ஒரு கோல் போட்டு முன்னிலையில் இருந்தது. எனினும் இரண்டாவது பாதியாட்டத்தில் பதில் கோல் ஒன்று யாழ். மாவட்ட அணியினால் போடப்பட்டது.

போட்டி முடியும் போது, இரு அணிகளும் 1:1 என்று சம நிலையில் இருந்தது. போட்டியின் சம்பியனைத் தெரிவு செய்ய சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது.

வழங்கப்பட்ட 5 சமநிலை தவிர்ப்பு உதையிலும் இரு அணிகளும் சம நிலையில் இருந்து, போட்டியில் மேலும் விறுவிறுப்பினை ஏற்படுத்தியது. மேலதிக சமநிலை தவிர்ப்பு உதையில் மன்னார் மாவட்ட அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தியது.

எனினும் யாழ்.மாவட்ட அணி அந்த உதையினைத் தவறவிட, மன்னார் மாவட்ட அணி சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




யாழ். வை.எம்.சி.ஏ. நிறுவனத்தினால் ஒஸ்மானியாக் கல்லூரி வீரர்களுகக்ான கால்பந்துப் பயிற்சி முகாம் கடந்த 8,9ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இதில் பயிற்சியில் பங்குகொண்ட வீரர்கள் மற்றும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், வை.எம்.சி.ஏ. உறுப்பினர்களைக் காணலாம். (105)

# பொலிகை மறவர் கலைக்குழுவின் மரபுசார் பாரம்பரிய விளையாட்டு

(வடமராட்சி)

பொலிகை மறவர் கலைக்குழுவின் அனுசரணையில் தமிழரின் மரபுசார் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வான போர்த் தேய்காய் அடித்தல் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பொலிகண்டி கந்தவன் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

சிலம்பாசான் பொலிகை தில்லை சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் போட்டியாளர்கள் ஐந்து போர் கொண்ட அணியாக வருகை தரவேண்டும் என்றும், ஒவ்வொரு குழுவும் 25 தேங்காய்கள் கொண்டு வரவேண்டும் எனவும், போட்டியில் நடுவரின் தீர்ப்பே இறுதியானது எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலதிகப் போட்டி விதிமுறைகள் நேரில் அறிவுறத்தப்படும் எனவும் போட்டியாளர்கள் உரிய நேரத்திற்கு வருகை தருமாறும் மறவர் கலைக்குழுவினர் கேட்டுள்ளனர். (116)

# நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசிடம் உதவி கோரும் எஸ்.எல்.பி.சி.

(கொழும்பு)

இரு புதிய மைதானங்களை அமைத்ததால் இலங்கைக் கிரிக் கெட் சபைக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடிக்கு அரசிடம் உதவி எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடந்த 2012 ஜனவரி தொடக்கம் இந்த மைதானங்கள் அமைக்கப்பட்டதால் இலங்கை கிரிக்கெட் சபை 8 மில்லியன் டொலருக்கு அதிகமான கடனில் சிக்கியிருப்பதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் பொருளாளர் நுஸ்கி மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மற்றும் பல்லேகல சர்வதேச மைதானங்கள் அமைக்கப்பட்டது மற்றும் கொழும்பு ஆர். பிரேமதாச அரங்கு புதுப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக்கிரிக்கெட்டின் நிதி நெருக்கடியை போக்க சுமார் 70 மில்லியன் டொலர் தேவைப்பட்டுள்ளது. மைதானங்கள் அமைக்கப்பட்டதால் ஏற்பட்ட கடன் குறித்து தேசிய திறைசேரியுடன் நாம் இரு தடவை பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். தற்போதும் பேச்சுவார்த்தை நடத்தி வருகி றோம் என்று மொஹமட் குறிப்பிட்டார்.இது பற்றி ஐ.சி.சி.யும் எம்மிடம் பேசி வருகின்றது. ஏனெனில் இது எமது இருப்பில் பெரும் சுமையாக உள்ளது. அரசிடம் இருந்து நாம் பணத்தைப் பெற முயற்சிக்க வேண்டும் என்றார்.

இதில் அம்பாந்தோட்டை அரங்கு அரசின் ஆலோசனைக்கு அமையவே இலங்கைக் கிரிக்கெட் சபையை அமைத்துள்ளது. கொழும்புக்கு அடுத்து பிரதான வர்த்தக நகராக அம்பாந்தோட்டையை அமைக்கும் திட்டத்தின் கீழே இந்த மைதானம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் இலங்கை வீரர்களுக்கான சம்பள நிலுவையை வழங்குவதற்கும், கடந்த ஆண்டு நடந்த ருவென்ரி – 20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான செலவுகளை சரி செய்வதற்கும் இலங்கைக் கிரிக்கெட் சபை வேறாக கடன் பெற்றுள்ளது. இந்தக் கடன், மைதானம் அமைக்கப்பட்டதற்கான கடனுடன் சேர்க்கப்படவில்லை. இந்த சூழலிலேயே இலங்கைக் கிரிக்கெட் சபை அரசின் உதவியை நாடி இருப்பதாக குறிப்பிட்ட மொஹமட் இன்னும் இரு ஆண்டுகளுக்குள் இலங்கைக் கிரிக்கெட் சபை முழுக் கடன்களிலிருந்து விடுதலை பெற எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்தார்.

ஓர் ஆண்டு காலப் பகுதியில் நாம் 1.369 மில்லியன் ரூபா (சுமார் 10.9 மில்லியன் டொலர்) இலாபம் ஈட்டினோம். இதில் பெரும் தொகை வங்கிக்கு கடன் மற்றும் வட்டி செலுத்தவே போகிறது. இதன் மூலம் தொடர்ந்து கடன் சுமையைக் குறைத்து வருகிறோம். நாம் பொறுப்பேற்கும்போது சுமார் 18.5 மில்லியன் டொலர் கடன் சுமை இருந்தது. தற்போது கடன் சுமை 10 மில்லியன் டொலரை விடவும் சற்றே அதிகமாக உள்ளது என்று இலங்கை கிரிக்கெட் சபைப் பொருளாளர் குறிப்பிட்டார்.

இலங்கை அரச வங்கியான இலங்கை வங்கியிடம் 5 மில்லியன் டொலருக்கு அதிகமான தொகையை கடனாகப் பெற்றே 2012 பெப்ரவரியில் வீரர்களுக்கான சம்பள நிலுவையை இலங்கைக் கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இந்தக் கடன்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இலங்கை வங்கிக்கு இலங்கைக் கிரிக்கெட் சபை இன்னும் பாரிய தொகையை கடனாக வெலுத்தவேண்டியுள்ளது.

இந்த ஆண்டில் எமக்கு அதிக போட்டிகள் இல்லை. இதனால் எமது பணப் புழக்கம் குறைவாகவுள்ளது. இந்நிலையில், பொருந்திய 24 மாத காலத்தை விடவும் வங்கிக் கடனை கட்டி முடிக்க 36 மாத காலத்திற்கு அதிகமான அவகாசம் பெற்றுள்ளோம். இது எமக்கு சற்று நிவாரணமாக உள்ளது என மொஹமட் குறிப்பிட்டார்.

இதில் வங்கியிடம் இருந்து அதிக கால அவகாசம் பெற்றதைப் போல இலங்கை கிரிக்கெட் சபை நிதி நெருக்கடியில் இருந்து மீள வட்டி வீதத்தை மாற்றும் படி கோரப்பட்டுள்ளது.

# பரந்தன் இந்தும.வி. எல்லேயில் சம்பியன்

(கண்டாவளை)

கிளிநொச்சி - கண்டாவளைக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான எல்லேப் போட்டியில் பரந்தன் இந்து மகா வித்தியாலய அணி இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை பரந்தன் இந்து மகா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை தருமபுரம் மகாவித்தியாலய அணியும் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பரந்து இந்து மகா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தையும், தருமபுரம் மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை இராமநாதபுரம் கிழக்குஅ.த.க. பாடசாலை அணியும் பிடித்துக் கொண்டன. இதில் முதல் மூன்று அணிகளும் வலய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (160)

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்றும் புலிகளை ஆதரிக்கிறாரா?

**- கனடாவிலிருந்து வெளியாகும் 'வானவில்' இதழ் கேள்வி -**

யாழ்ப்பாணத்திலிருந்து "உதயன்" என்றொரு நாளிதழ் கடந்த பல வருடங்களாக வெளிவருகிறது. இதன் உரிமையாளர் தமிழ் தேசியக்



கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஈ.சரவணபவன். (இவர் முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிய "சப்றா பினான்ஸ்" நிறுவனத்தில் முக்கிய நிர்வாகியாகவும் இருந்தவர். இந்த நிறுவனத்தில் பொதுமக்கள் வைப்பிலிட்ட கோடிக்கணக்கான பணத்தை அந்த நிறுவனம் திருப்பி வழங்காமல் கைவிரித்ததால், பலர் ஏமாற்றப்பட்டதுடன் சிலர் மனமுடைந்து தற்கொலையும் செய்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது)

உதயன் பத்திரிகையின் பிரதான பணி கண்மூடித்தனமான அரச எதிர்ப்பு என்பதை யாழ். மக்கள் நன்கு அறிவர். அதன் உரிமையாளர் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் மிகவும் நெருக்கமாகக் கூடிக் குலாவியவர். இப்பொழுதும் அந்த உறவு உண்டு. அந்த உறவு அவர் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு ஒரு தடையாக அமையவில்லை. அதற்குக் காரணம் கூட்டமைப்புத் தலைமையே ஐ.தே.க.யுடன் தேன் நிலவு கொண்டாடுகையில், சரவணபவன் கூட்டமைப்புத் தலைமைக்கு ஒரு பொருட்டல்ல. இவர்கள் தமக்கு ஏதாவது தேவையென்றால் அரச தலைமையிடமும் குலாவத் தயங்கமாட்டார்கள்.

எனவே தமிழரசுக் கட்சியில் எத்தனையோ மூத்த உறுப்பினர்கள் இருக்க சரவணபவன் மிகச் சுலபமாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகிவிட்டார். அவரைத் தனது வேட்பாளராக நியமிப்பதற்கு முன்னர், பொதுமக்களை ஏமாற்றிய சப்றா பினான்ஸ், நிறுவனத்தில் அவரது பங்கு, பணி என்னவாக இருந்தது என்பது பற்றிக் கூட்டமைப்பு ஆராயவோ, அதைப்பற்றிக் கவலைப் படவோ இல்லை.

சரவணபவனின் உதயன் பத்திரிகை தினசரி அரச எதிர்ப்பு வாந்தி எடுப்பது ஒருபக்கம் இருக்க, அப் பத்திரிகை வெளிப்படையாகவே புலிகள் இருந்த காலத்திலும் சரி, அவர்கள் அழிக்கப்பட்ட பின்னரும் சரி, அவர்களை ஆதரித்து எழுதி வருகிறது. அதற்குப் பல உதாரணங்கள் இருப்பினும் சமீபத்திய உதாரணம் ஒன்று.

2013 மார்ச் 14ஆம் திகதிய உதயன் வெளியீட்டில் "இந்தியாவின் துரோகம் வெளிச்சத்துக்கு வந்தது" என்றொரு செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி அண்மையில் இந்தியப் நாடாளுமன்றத்தில் தெரிவித்த ஒரு கருத்தை வைத்தே, இந்தியா துரோகம் இழைத்து விட்டது என குறித்த செய்திக்கு உதயன் தலைப்பிட்டுள்ளது.

ஏ.கே.அந்தோனி தெரிவித்த தகவலில், 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தின்படி, தமிழ் நாட்டுக்கும் இலங்கையின் வடமேற்குக் கடல் பகுதிக்கும் (வடபகுதி தீவுகளில் தொடங்கி நீர்கொழும்பு வரையிலான பகுதி) இடையில் இந்திய மீன்பிடிப்படகுகளை ஒரு குறிப்பிட்ட காலம் மீன்பிடிக்காமல் செய்ததன் மூலம், புலிகளின் கடல்வழி விநியோக மார்க்கத்தை முடக்கி, இலங்கை இராணுவத்துக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததாகக் கூறியிருந்தார்.

இதைத்தான் உதயன் பத்திரிகை இந்தியாவின் துரோகம் எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவின் இந்த நடவடிக்கை யாருக்குத் துரோகம் இழைத்துள்ளது என உதயன் வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும், அது புலிகளுக்குத் துரோகம் இழைத்துள்ளது என்பதே உதயனின் குற்றச்சாட்டு என்பது வெளிப்படையான விடயம்.

புலிகளை அழித்ததன் மூலம் இன்று இலங்கை மட்டுமின்றி, இந்தியாவும் பயங்கரவாதத்திலிருந்து தப்பியுள்ளது என்பதுதான் உண்மை. ஒரு ஜனநாயக நாடு தனது அயலிலுள்ள இன்னொரு ஜனநாயக நாட்டுக்கு உதவியதில் என்ன துரோகம் இருக்கிறது? புலிகள் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைக் கடத்தி வந்து இலங்கை அரச படைகளுடன் யுத்தம் செய்யவும், பொதுமக்களைக் கொலை செய்யவும் இந்தியா வழி விட்டிருக்க வேண்டும் என இன்றும் உதயன் கருதுகின்றதா?

இந்த நடவடிக்கையை உதயன் இந்தியாவின் துரோகம் என வர்ணிக்குமாக இருந்தால், அது வெளிப்படையாக இன்றைக்கும் புலிகளின் நடவடிக்கைகளை ஆதரிக்கிறது என்றுதான் அர்த்தமாகும். இவ்வாறான ஒரு செய்தியை வெளியிட்ட உதயன் வெறுமனே ஒரு வியாபாரப் பத்திரிகை மட்டுமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைப் பிரசாரப் பத்திரிகையாகவும் இருப்பதால், அதில் வெளியான இந்தக் கருத்துக்கும் அந்த நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவனுக்கும் தொடர்பு உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே இலங்கையில் உள்ள சட்டங்களின்படி, ஒரு ஊடகம் இவ்வாறு பயங்கரவாதத்தை ஆதரித்து செய்தி வெளியிடுவது சரியா என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்துவது அவசியம். அத்துடன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்றும் புலிகளுக்கு ஆதரவாகத் தனது ஊடகம் ஒன்றில் பிரசாரம் செய்வது சரியா என்பதை, ஜனநாயக வழியில் செயற்படுவதாகச் சொல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளக்குவதும் அவசியமாகும்.

**(நன்றி: வானவில் இதழ் 27)**

# ஹொலிவுட் வியாபாரம்!

ஹொலிவுட்டில் படம் தயாரிப்பது மட்டுமல்ல, அதை வியாபாரப்படுத்தும் முறையும் மிக வித்தியாசமானதுதான். ஹொலிவுட் சினிமா வியாபாரம் பற்றி கொஞ்சம் பார்ப்போமா?

மொத்தம் 10,80,000 அமெரிக்கர்கள் நேரடியாகவும், 2,30,000 பேர் ப்ரீ லான்சர்களாகவும் (நடிகர்-நடிகைகளைச் சேர்த்து) வேலை செய்யும் தொழிற்சாலை இது. இங்கே வருடத்துக்குச் சராசரியாய் 9.5 பில்லியன் டொலர்கள் வசூல்




ஆகிறது. (பில்லியன் - நூறு கோடி)

பொது இடங்களில் படம் பிடிக்க வசூல் செய்யும் வரியாக மட்டும் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று இலட்சம் டொலர் அரசுக்கு வருமானமாக வருகிறது.

ஹொலிவுட்டில் இருப்பவர்களின் சராசரி வருமானம் 73,000 டொலர். (சராசரி அமெரிக்கர்களின் வருமானத்தைவிட 80 சதவீதம் அதிகம் இது.)

ஆண்டுக்கு 30 பில்லியன் டொலர் சம்பளமாக / கூலியாக பணம் விநியோகம் செய்யப்படுகிறது. 30.2 பில்லியன் டொலர் தொழில்சார்ந்த நிறுவனங்களுக்கு ஆண்டு வருமானமாகக் கிடைக்கிறது.

அமெரிக்க பொருளாதாரத்தில் ஹொலிவுட் தன் பங்காகக் கொடுக்கும் தொகை 60 பில்லியன் டொலர்கள்.

இன்றும் 1 கோடி பேருக்கு மறைமுக வேலை வாய்ப்புகள் இதன் மூலமாகக் கிடைக்கின்றன. ஒரு இலட்சத்து 60 ஆயிரம் துணை நிறுவனங்கள் இதன் மூலம் இயங்குகின்றன.

இப்படி அமெரிக்கப் பொருளாதாரத்தில் மிகப் பெரிய பங்கு வகிக்கும் மந்திரத் தொழில் ஹொலிவுட் சினிமா. மேலே குறிப்பிட்ட புள்ளிவிவரங்கள் எல்லாம் 2005ஆம் ஆண்டுக் கணக்கு! இப்போது 2013இல் நிலைமை இன்னும் எத்தனை பன்மடங்கு பெருகியிருக்கிறதோ... தெரியாது!

**('சினிமா வியாபாரம்' என்ற நூலில் சங்கர் நாராயண்)**


# விஷ எறும்புகள்!



black bulldog

எறும்பு கடித்தால் லேசான வலி ஏற்படும். சிறிது நேரத்தில் கடிபட்ட இடம் வீங்கும்.

ஆனால் அவுஸ்ரேலியாவில் காணப்படும் black bulldog என்ற எறும்பும்,



Fire ant


அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் காணப்படும் fire ant என்னும் எறும்பும் விஷத்தன்மை கொண்டவை.

ப்ளாக் புல்டோக் கடிப்பதுடன் கொட்டவும் செய்யும். இதன் விஷம் உடலில் ஏறினால் காய்ச்சல், தலைவலி வந்துவிடும்.

இதைவிட மோசமான இனம் fire ant. இந்த எறும்பு ஊசி போன்ற தன் கொடுக்கால் கொட்டும். 25 வினாடிகளுக்குப் பின்னர் கொடுக்கைக் கடித்த இடத்திலேயே விட்டுவிடும். அப்போது உடலில் விஷம் இறங்கத் தொடங்கும். இந்த எறும்பு கொட்டினால் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவிடும். இதனால் தோல் நோய்கள் ஏற்படும்.

அமெரிக்க நாட்டின் தென்பகுதியில் மட்டும் ஆறரைக் கோடி ஹெக்டேயர் நிலப்பரப்பில் இந்த எறும்புகள் வாழ்கின்றன..

# விண்வெளியில் பிளாற்றினம் வேட்டை!



எத்தனை நாள்தான் பூமியிலேயே சுரங்கம் தோண்டி தங்கம், வைரம் என்று வெட்டி எடுப்பது? ஏற்கனவே அரிதாகிப் போன அந்தக் கனிமங்களை இன்னமும் பூமியில் தேடிக்கொண்டிருப்பது வீண் என்ற முடிவுக்கு வந்துவிட்டது ப்ளானட்ரி ரிசோர்ஸஸ் (planetary resources) என்ற நிறுவனம். அதனால்தான் விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கும் விண்கற்களில் புதைந்திருக்கும் பொக்கிஷங்களைத் தேடி புறப்பட்டுவிட்டது அந்நிறுவனம்.

நம் பூமிக்கு அருகிலேயே பல விண்கற்கள், சிறிதும் பெரிதுமாக உலவிக் கொண்டுதான் இருக்கின்றன. அவற்றில் சில இன்னொரு கிரகமோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு மிகப் பெரியவை. அஸ்டிரோய்ட் என்று அழைக்கப்படும் அந்த விண்கற்களைத் தோண்டிப் பார்த்தால், பூமியைப் போலவே தண்ணீர் கிடைக்கலாம். ஏன்... பிளாற்றினம், வெள்ளி போன்ற உலோகங்கள் கூடக் கிடைக்கலாம். 500 மீற்றர் குறுக்களவு உள்ள சிறு கோள்களில் பெரிய அளவில் பிளாற்றினம் உள்ளதாக நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். அவற்றைத்தான் வெட்டி எடுக்கத் திட்டமிட்டுள்ளது பிளானட்ரி ரிசோர்ஸஸ்.

விண்கலத்தோடு விண்கற்களை நெருங்குவதற்கு முன்பு எந்தெந்த விண்கற்களில் என்னென்ன பொக்கிஷங்கள் உள்ளன என்பதை அறிய வேண்டும். இதற்கான தொழில்நுட்ப பிரச்சினைகள், செலவுகள், போக்குவரத்து ஆகியவற்றை அந்த நிறுவனமே எதிர்கொள்ளும். இன்னும் பத்தாண்டுகளில் கோள்களில் உள்ள செல்வங்களைத் தோண்டி எடுக்கும் பணி ஆரம்பமாகிவிடும்.

கிரகங்களில் செல்வங்களைத் தோண்டி எடுக்கும் இந்த முயற்சி மட்டும் வெற்றி பெற்றுவிட்டால், அது தொழிற் புரட்சியைப் போல் மனித குலத்திற்கு பெரிய அளவில் பலனளிக்கும் சம்பவமாக அமையும் என்கிறார்கள். சில கோள்களும் அளவில் சிறியதாக இருப்பதால் கனிம வளங்களை எடுப்பது சுலபம் எனக் கருதுகின்றனர் பிளானட்ரி ரிசோர்ஸஸ் நிறுவனத்தினர். இக்கோள்களுக்கு புவி ஈர்ப்பு சக்தி பலமாக இல்லாததால் ஒரு தானியங்கி வானூர்தி மூலம் கனிமங்களை எடுக்கலாம்.

விண்வெளியில் மிதக்கும் பாறைகளிலிருந்து தண்ணீரை எடுத்து அதை றொக்கெற்களுக்கான எரிபொருளாக மாற்றிக்கொள்ள முடியும். இதற்காக எரிபொருளை நிரப்பும் நிலையங்கள் விண்வெளியில் அமைக்கப்படும். வருங்காலத்தில் வரப்போகும் அப்படிப்பட்ட விண்வெளி fuel station ஒன்றை கனடா நாட்டு கிரா∴பிக் வடிவமைப்பாளர் பிரையன் வெர்ஸ்டீஜ் வடிவமைத்திருக்கிறார். அதைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள்.

கேட்பதற்கே கனவு போல இருக்கும் இந்தத் திட்டம், பெருத்த பொருட்செலவு வைக்கும். ஆனாலும் கவலை இல்லை. உலகின் முதன்மை நிறுவனங்களான கூகுள், மைக்ரோசொ∴ப்ட் போன்றவையும் "டைட்டானிக்" பட இயக்குநர் ஜேம்ஸ் கமரூன் போன்றவர்களும் இதற்கு நிதி உதவி அளித்து வருகின்றனர்.

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ். தன் 18ஆவது வயதில், கிழக்கு இந்திய கம்பெனியின் ஊழியராக கொல்கத்தா வந்தார். 1772இல் வங்காளத்தின் கவர்னராக, 40ஆவது வயதில் நியமிக்கப்பட்டார். மொகலாய நவாப்களை மிரட்டி இலட்சக்கணக்கில் பணம் பறித்தார். இவர் மிரட்டலுக்குப் பணியாமல், இவர் மீது மேலிடத்திற்கு புகார் கொடுத்தவர்களில், மகாராஜா நந்தகுமாரும் ஒருவர். அவர் மீது பொய் கையெழுத்திட்டதாக, 1775ஆம் ஆண்டு ஹேஸ்டிங்ஸ்



# பொய் கையெழுத்துக்கு தூக்கு!

வழக்கு தொடர்ந்தார். விசாரணை ஜூன் மாதம் தான் தொடங்கியது. ஆனால், மே மாதம் 18ஆம் திகதி வாரன் ஹேஸ்டிங்ஸ் இவருக்கு மரண தண்டனை கிடைக்குமென்று கூறினார். இதன்படி, கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி, நந்தகுமாருக்கு ஜூன் மாதம் மரண தண்டனை விதித்தார். நந்தகுமார் நடுரோட்டில் தூக்கிலிடப்பட்டார். பொய் கையெழுத்திற்கு மரண தண்டனை விதிக்கும், 1728ஆம் வருடத்திய ஆங்கிலேயச் சட்டம், அப்போது இந்தியாவில் நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**('உலக மகா கொடுங்கோலர்கள்' நூலிலிருந்து...)**

# கறிவேப்பிலைகளின் கதை


**— அதிஷா**

கோடம்பாக்கத்து உதவி இயக்குனர்களிடம் பத்து நிமிடம் பேசிப்பாருங்கள். "என்னது இப்படியெல்லாமா நடக்குது" என்று ஆச்சர்யமாக இருக்கும். மிகப்பெரிய விஷயங்களை போகிற போக்கில் சொல்லிவிட்டு போய்விடுவார்கள். நாம் இதுவரை வியந்து பார்த்த பல நட்சத்திரங்களும் விண்ணிலிருந்து மண்ணில் விழுந்து நம் மனதில் நொறுங்குவது சாதாரணம். அப்படியொரு உதவி இயக்குனர் எழுதிய புத்தகம்தான் "தோற்றுப்போனவனின் கதை".

இந்த உதவி இயக்குனரின் சிறப்பு, கடந்த 50 ஆண்டுகளாக இவர் உதவி இயக்குனராகவேதான் இருக்கிறார்!

சாதாரண ரசிகனுக்கு வெளிப்பார்வையில் தகதகவென ஜொலிக்கிற சினிமா உலகம் தனக்குள் எப்படி இயங்குகிறது? நாம் திரையில் பார்க்கிற நட்சத்திரங்களின் முகப்பூச்சில்லாத முகங்கள் எப்படியிருக்கும்? சினிமா உலகில் வெற்றிபெற என்ன தேவை? இங்கே தோல்வி எப்படி நிகழ்கிறது? என்பதையெல்லாம் தன் அனுபவங்களின் ஊடாக கூறுகிறார் 78 வயது உதவி இயக்குனரான அழகேசன். எவ்வளவு துரோகம், எவ்வளவு இழப்பு, எவ்வளவு அவமானங்கள்.

இருந்தும் விடாப்பிடியாக இன்று வரை போராடுகிறார். ஆனால், காலம் அவரை மெகாசீரியல்களுக்கு நகைச்சுவை காட்சிகள் எழுதவும், சினிமாவுக்கு காமெடி வசனங்கள் எழுதவும் பயன்படுத்தப்படுகிற பினாமி எழுத்தாளராக மாற்றிவிட்டிருக்கிறது. எத்தனையோ வெற்றிப்படங்களுக்கு பின்னால் அழகேசனின் உழைப்பும் அர்ப்பணிப்பும் இருந்தாலும் அன்றும் இன்றும் அதற்குரிய எந்த அங்கீகாரமும் இன்றித் தனிமையில் வாழ்கிறார். கடைசி வரை அவரால் ஒரு முழுநீள படத்தை இயக்கவே முடியவில்லை. பலமுறை படமெடுக்க தொடங்குவதும் பின் கைவிடுவதுமர்க நீள்கிறது அழகேசனின் அனுபவங்கள்.




சிவகங்கையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, வறுமையில் வாடி படித்து முடித்து நடிகனாகும் ஆசையில் நாடகங்களில் நடிக்கிறார். பிறகு சென்னைக்கு வருகிறார். இங்கே படாத பாடுபட்டு.. உதவி இயக்குனராக வசனகர்த்தாவாக உயர்கிறார். அதோடு அப்போது சான்ஸ் தேடி அலைந்துகொண்டிருந்த பல நடிகர், நடிகைகளுக்கும் வாய்ப்புகள் வாங்கித்தருகிறார். கவுண்டமணி, பாண்டியராஜன், சுமித்ரா, முத்துராமன், ஐசரி வேலன் என ஏகப்பட்ட பேர் வாய்ப்புத்தேடி அலைந்த காலத்தில் கோலிவுட்டில் அவர்களுக்கான முதல்வாய்ப்பைப் பெற்றுத்தந்திருக்கிறார் அழகேசன்.

அதில் மிகச்சிலரே இன்னும் அந்தப் பழைய மரியாதையோடு அழகேசனோடு தொடர்பில் இருக்கிறார்கள் என்று வருத்தத்தோடு பதிவு செய்கிறார். சிலர் தன்னை முழுமையாக மறந்துவிட்டதையும் குறிப்பிடுகிறார்.

புகழின் உச்சிக்கு சென்ற பின்னும் இன்னமும் அழகேசனை "அழகேசண்ணே" என்று அழைப்பவராகவும் அவரோடு சகஜமாக அதே பழைய அன்போடும் இருப்பவராக ஒரே ஒருவரைத்தான் குறிப்பிடுகிறார். அந்த நடிகர், கவுண்டமணி.

ஒருமுறை சாண்டோ சின்னப்பதேவர் தன் படத்துக்கு நல்ல நகைச்சுவை நடிகன் வேண்டும் என அழகேசனிடம் கேட்கிறார். அப்போது வாய்ப்புத்தேடி கம்பெனி கம்பெனியாக அலைந்துகொண்டிருந்தார் கவுண்டமணி. அவரை கண்டுபிடித்து தேவரிடம் அழைத்துச் செல்கிறார் அழகேசன்.



அலுவலக முன்னறையில் தேவர் அமர்ந்திருக்கிறார். கவுண்டமணி உள்ளே நுழைந்து வணக்கம் சொல்லிவிட்டு காத்திருக்கிறார். "எந்த ஊர்.. கவுண்டமணி என்கிற பெயர் உனக்கு எப்படி வந்தது?" என்று எல்லா விஷயங்களையும் துருவி... துருவி... கேட்கிறார். கவுண்டமணியும் வாய்ப்புக் கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கையோடு பதில் சொல்கிறார்.

எல்லாம் பேசி முடித்த பின், தேவர் "ஏம்பா நீ இவ்வளவு கறுப்பா இருக்கிறீயே.. உனக்கு மேக்கப் பவுடருக்கு எங்கேப்பா போறது?" என்று சொல்ல. கவுண்டமணிக்கு முகம் மாறிவிட்டது. பதில் பேசாமல் அமைதியாக நிற்கிறார். அவமானத்தை உணர்கிறார்.

"சரிப்பா நான் சொல்லி அனுப்பறேன். மகராசனா போய்ட்டு வா" என்று சொல்லி தேவர் கவுண்டமணியை அனுப்பிவிடுகிறார்.

கவுண்டமணியும் அழகேசனும் வெளியே வர.. கவுண்டமணி, அழகேசனை முறைக்கிறார். "இந்த ஆளு மிருகங்களை வச்சு படம் எடுத்து, அதோடயே பேசி பழகிட்டாருண்ணே.. அதான்.. என்னை மனுஷனா மதிச்சு பேசலை.. எனக்கும் ஒரு காலம் வரும்ண்ணே.. அப்ப வச்சுக்கிறேன் கச்சேரிய" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து போய்விடுகிறார்.

அதற்குப் பிறகு வேறு படங்களில் நடித்து கவுண்டமணி புகழின் உச்சிக்கு செல்கிறார். அந்த நேரத்தில் தேவர் பிலிம்ஸ் தண்டபானி கவுண்டமணியை ஹீரோவாக்கி படமெடுக்க அவரை அணுகுகிறார். ஆனால் கவுண்டமணி அதை மறுத்துவிடுகிறார். அதோடு பல வருடங்களுக்கு முன்னால் அவர் தேவர் பிலிம்ஸ் அலுவலகத்துக்கு வந்தது, அவருடைய அப்பா (தேவர்) அவமானப்படுத்தியதையெல்லாம் சொல்ல.. அந்த இடத்திலேயே தண்டபாணி மன்னிப்புக் கேட்ட பின்புதான் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டாராம் கவுண்டமணி.

பாண்டியராஜன் நடிகனாகும் ஆசையோடு அலைந்து கொண்டிருந்த போது, அவருக்கு "தங்கரங்கன்" என்னும் படத்தில் நடிக்க வாய்ப்பு வாங்கிக் கொடுத்ததோடு, பிறகு பாக்யராஜிடம் உதவி இயக்குனராக சேர்த்துவிட்டதும் அழகேசன்தான்.

சாதாரண நாடக நடிகராக தி.நகரில் சைக்கிளில் சுற்றிக்கொண்டிருந்த முத்துராமனை "தெய்வத்திருமகள்" படத்தின் மூலமாக திரையுலகில் கால்பதிக்க வைத்ததும் அழகேசன்தான். தெய்வத்திருமகள் சூட்டிங்கில் முத்துராமனைப் பார்த்து பிடித்துப்போய் இயக்குனர் ஸ்ரீதர் தன்னுடைய நெஞ்சில் ஓர் ஆலயம் படத்தில் பயன்படுத்திக்கொண்டாராம்.

இதுபோல, இன்று நாம் கொண்டாடும் பல இயக்குனர்கள், நடிகர்கள், நடிகைகளின் ஆரம்பகால அனுபவங்கள் இப்புத்தகத்தில் ஏராளமாக கொட்டிக்கிடக்கின்றன. அவர்களுடனான அனுபவங்களின் வழியாக தன் தோல்வியை ஒப்புக்கொள்கிறார் இந்த உதவி இயக்குனர்.

அவரே இயக்கி முழுமையாக தயாராகி வெளியாகாத படங்களும் உண்டு என்கிறார். சகலவித மனிதர்களையும் வாழ்வின் மிகப்பெரிய தோல்விகளையும் எதிர்கொண்டுவிட்ட இந்த உதவி இயக்குனர் தன்னுடைய தோல்வியைக்கூட அழகாக ஒப்புக்கொள்கிறார்.

"மண்ணில் உள்ள தாவரங்கள் மரம், செடி, கொடிகளில் உள்ள இலைகள் எல்லாம் பழுப்பு நிறமாகி உதிர்ந்துவிடும். ஆனால், கருவேப்பிலை இருக்கிறதே அது காய்ந்து சருகாகி மரத்திலேயே வாடிக்கொண்டு இருக்குமே தவிர பழுப்பு நிறமாகி உதிர்வதில்லை. அதுதான் நான்!"

**புத்தகத்தின் கடைசி வரிகள் இவை.**



# 2013 புதிர்ப்போட்டி 40

நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

**சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது**

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## புதிர்ப்போட்டி 38 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

பெயர்: சி.தயாளினி
பாடசாலை: யா/ அத்தியர் இந்துக் கல்லூரி.

பெயர்: உ.டிலக்ஷனா
பாடசாலை: யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

பெயர்: ஸ்ரீ.சஞ்சுதன்
பாடசாலை: யா/ இந்துக் கல்லூரி.

பெயர்: த.யுவந்தன்
பாடசாலை: கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

பெயர்: சூ.விமலேசன்
பாடசாலை: யா/ ஹாட்லிக் கல்லூரி.

பெயர்: கு.பிரியதர்சா
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.


பெயர்: ய.தேவகீர்த்தனா
பாடசாலை: யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர்: த. இளங்கோ
பாடசாலை: கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

பெயர்: மெ.இங்கிதை
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

## 1 இடமிருந்து வலம்

1) பெண்கள் அழகிற்காக நயனத்திற் கிடும் மை
4) ஞாபகச் சின்னமாக இதனை அழைப்பர்.
5) வண்டி என்றும் அழைப்பர்
8) மூங்கில் என்பது இதன் மறுபெயர்
9) எரிபொருள்களில் ஒன்று
10) பிரதியைக் குறிக்கும்
11) கற்பக தரு என்பது இதன் மறுபெயர்
12) வாசனையைக் குறிக்கும்.



## மேலிருந்து கீழ்

1) உணவு இதனைக் குறிக்கும்.
12) தோழன் என்றும் சொல்வர்.
13) இராசிகளில் ஒன்று.
6) கட்டளையைக் குறிக்கும்.
17) கடல் என்றும் அழைப்பர்.
9) இது கடலைத் தேடி ஓடும்.
11) இது வந்தால் பத்தும் போகும் என்பர்.

## 2 பொது அறிவுத் துணுக்குகள்!

**1) முதல் தமிழ் அகராதியை தொகுத்தவர் யார்?**

**2) முதல் சிங்கள அகராதியை தொகுத்தவர் யார்?**

**3) தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர் யார்?**

**4) உலகின் முதல் சிறுகதை ஆசிரியர் யார்?**

**5) இலங்கையில் தமிழில் வெளியான முதலாவது நாவல் எது?**

## புதிர்ப்போட்டி 38 இல் வெற்றியீட்டியோர்



பெயர்:
ஆ.கீர்த்தனா
பாடசாலை:
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



பெயர்:
க.அபிராமி
பாடசாலை:
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



பெயர்: கி.டிசாயினி
பாடசாலை:
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.



பெயர்:
இ.பிரியதர்சினி
பாடசாலை:
யா/ உடுவில் மகளிர் கல்லூரி.



பெயர்:
ப.தேவகீர்த்தனா
பாடசாலை:
யாழ். நெடுந்தீவு மகா வித்தி.

## புதிர்ப்போட்டி 38 இற்கான சரியான விடைகள்

**1**

1) மகாவலி கங்கை
2) பிடிகல கால்வாய்
3) வடமாகாணம்
4) மேல் மாகாணம்
5) அம்பாந்தோட்டை

**2**

1) ஐரோப்பிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
2) பசுபிக் பிராந்திய சுதந் திர வர்த்தக ஒப்பந்தம்
3) தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்.
4) இந்திய இலங்கை சுதநதிர வர்த்தக ஒப்பந்தம்.
5) பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

**3.**

1) கொச்சி
2) கேரளா
3) மும்பை
4) சன்பிரான்ஸிஸ்கோ
5) கல்கத்தா

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டி 40 இற்கான விடைக்ளை எதிர்வரும் ஏப்ரல் - 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு**

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்தி லுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ......................................
பாடசாலையின் பெயர் ......................................
தரம் :- :-......................................
தொலைபேசி இல.:-......................................
முகவரி :-......................................
......................................

# வட்டுவாகல் பாலத்தை புனரமைக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவில் உள்ள வட்டுவாகல் பாலம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதால் இதனூடான போக்குவரத்து அபாயத்துடன் இடம்பெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாதுள்ள இப்பாலத்தினூடாக முல்லைத்தீவு ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஊடாக கிளிநொச்சி சேவையில் ஈடுபடும் அரச தனியார் பேருந்துகள் போக்குவரத்தை மேற்கொள்கின்றன.

இந்நிலையில் மிகமோசமாக சேதமடைந்துள்ள இப்பாலத்தினூடாக வாகனப் போக்குவரத்து அச்சத்துடன் இடம்பெறுவதாகவும் இதனால் மக்கள் அச்சத்துடனேயே செல்லவேண்டிய நிலை காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இப்பாலம் யுத்தம் நிறைவடைந்து 3வருடங்கள் கழிந்தும் இதுவரை புனரமைப்புக்குட் படாமல் இருப்பது கவலையளிப்பதாகத் தெரிவிக்கும் மக்கள் இப்பாலத்தை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றனர். (04)

# மாநகரசபைக்கு புதிய கட்டடம் நிதி வழங்க அமைச்சரவை அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதியை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணம் விஜயம் செய்து மாநகர சபை கட்டடம் அமைக்கப்படவுள்ள வளாகத்தை பார்வையிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

800 மில்லியன் ரூபா செலவில் இந்த நிர்மானப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதன் முதற்கட்டப் பணிக்காக 200 மில்லியன் ரூபாவினை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் எதிர்வரும் யூன் மாதம் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (02)

# புத்தாண்டை முன்னிட்ட பாதுகாப்பு பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்து

(வவுனியா)

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் மக்களின் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷேமந்த பொதுமக்களுக்கான அறிவறுத்தல்களை துண்டுப் பிரசுரம் மூலம் வெளியிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ், சிங்கள புத்தாண்டு வேளையில் நகரத்திற்கு வரும் முன் மக்கள் தங்களுடைய பொருட்கள் சம்பந்தமாக அவதானம் செலுத்தவேண்டும்.

நகரத்திலோ பேருந்து தரிப்பிட நிலையத்திலோ பிரயாணம் செய்யும்போதோ தங்களுக்கு பக்கத்தில் உள்ள இனந்தெரியாத நபர்கள் விடயமாக அவதானமாக இருக்கவும்.

வீட்டை விட்டு வெளியேறும்போது மக்கள் தாங்கள் எடுத்துவரும் ஆவணங்கள் சம்பந்தமாக கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் மக்கள் தாம் நடந்து செல்லும்போதும், கடைகளுக்கு செல்லும்போதும் தங்களுடைய பெறுமதியான பொருட்கள் சம்பந்தமாகவும்/பயணப் பை சம்பந்தமாகவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் செயற்படவும்.

பெறுமதியான பொருட்களை வீட்டில் வைத்துவிட்டு அவற்றுக்கு பாதுகாப்பாக ஒருவரை நிறுத்திவிட்டு வரவும்.

உங்களுக்கு அவசரப் பிரச்சினை வரும்போது உடனடியாக கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்துங்கள். 119/ 118, செயற்பாட்டு நிலையம் 0242222223, பொலிஸ் நிலையம் வவுனியா 024 2222222, மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு 024 2222998 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துங்கள். என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன. (160)



குருநகர் சனசமூக நிலையத்தில் சமூக அபிவிருத்திக்கான ஒஸ்லோ பேர்கன் நோர்வே இணையம் நடத்தும் தரம் மூன்று மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பில் கல்வி புகட்டல் நடைபெறுவதைக் காணலாம். (68)

# அச்சுவேலிப் பொலிஸாருக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப்பொலிஸாருக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் கடந்த புதன் கிழமை முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இயங்கும் வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கே இந்த முறைபாடு கிடைக்கப்பெற்றிருப்பதாக அதன் பணிப்பாளர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி வடக்கு சரசாளி அருள்மிகு சித்திரவேலாயுதர் தேவஸ்தானத்தின் நிர்வாகம் சம்பந்தமான வழக்கு ஒன்று மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொலிஸாரின் தலையீடு இருப்பதாகத் தெரிவித்தே இந்த முறைப்பாடு அவ் ஆலயத்தின் நிர்வாகத்தினரினால் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து தேசிய பொலிஸ் ஆணைக்குழு விசாரணை செய்யவுள்ளதாகவும் தெரிவித்த சிறிதரன் இந்தவருடம் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு எதிராகக் கிடைத்த மற்றுமொரு முறைப்பாடு தொடர்பான விசாரணை தேசிய பொலிஸ ஆணைக்குழுவினால் மேற்கொளளப்பட்டுள்ளது. இந்த விசாரணை அறிக்கை கிடைத்ததும் பொலிஸார் மீது தவறுகள் இருப்பின் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆணைக் குழு சிபாரிசு செய்யும்.இந்த வருடம் இதுவரை இரண்டு முறைப்பாடுகளும் கடந்த வருடம் ஆறு முறைப்பாடுகளும் வடக்கில் இருந்து பொலிஸாருக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கிடைத்திருப்பதாகவும் மேலும் தெரிவித்தார். (பா)

# தபால்சேவையை வழங்குமாறு வெலிஓயா மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது பிரதேசத்தில் தபாலகம் ஒன்று இல்லாமையால் தபால் சேவையைப் பெறுவதில் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராம அலுவலர் பிரிவுகளில் சிங்கள மக்களே வசித்து வருகின்ற நிலையில் இம்மக்கள் தபால் சேவைகளை பெறுவதாயின் 45 கிலோ மீற்றர் தூரம் உள்ள முல்லைத்தீவு நகர்ப்பகுதிக்கு செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அவசர தேவைகளுக்காக தந்தி அனுப்புதல், பணம் அனுப்புதல் முத்திரைத் தேவை போன்ற அத்தியாவசிய நடவடிக்கைகளை பெறமுடியாது தாம் சிரமங்களுக்குள்ளாவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இக்கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்களின் தபாற் தேவையைக் கருத்தில் கொண்டு தபாலகம் ஒன்றை நிறுவுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




கொழும்பு வை.எம்.சி.ஏ. அமைப்பினால் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்கும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் கல்லூரியில் நடைபெற்றபோது யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத் தலைவர் நிலாம் மாணவி ஒருவருக்கு நிதி வழங்குவதைக் காணலாம். (105)

# பொதுக்கூட்டம்

பூநகரி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ. பாலச்சந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறவுள்ளதால் பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

# பரமர் சங்கமம்



'நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்றால் என்னஅர்த்தம்? இப்ப மூன்று கால் முயல்கள் தோன்றுவதும் ஒன்றும் புதுமை இல்லாமல் போய் விட்டது. எண்டாலும் மரபு வழி ஒண்டுண்டல்லவா? அதன்படி நான்கு கால்கள் என்பது வெளிச்சம் ஆயினும் பிடிச்ச எண்ட சொல் மாவிலோ அல்லது சிமெந்திலோ பிடிச்சதைக் குறிக்குமானால் நான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால்கள் இருக்கலாமா?

பிரச்சனை அதுவல்ல. அந்தப்பழமொழி சுத்தி வளைத்து எமது பிடிவாதம் அல்லது அறியாமையைத்தான் சொல்கிறது. அது சாதாரண விடையமானால் பொருட்படுத்தாமல் விட்டு விடலாம்.

இது முக்கியமாக இந்துக்களின் புதுவருடப்பிறப்பு, புண்ணிய காலம், கைவிஷேசம் வழங்கல் மற்றும் புதிய தொழில் ஆரம்பித்தல் போன்ற மிகவும் முக்கியமான காலநேர விடையத்தையே பரமர் விவாதத்துக்கு எடுத்துள்ளார்.

எமது நாட்டைப் பொறுத்த மட்டில் வருடா வருடம் இருவேறு பஞ்சாங்கங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இரண்டுமே ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட தகவல்களையே வெளியிட்டு வருவது உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய சங்கதி.

வாக்கியபஞ்சாங்கம் 13.04.2013 சனிக்கிழமை நள்ளிரவு 11.58 மணிக்கு விஜய வருடம் ஜனனிப்பதாகத் தெரிவித்துள்ளது.

திருக்கணித பஞ்சாங்கம் 14.04.2013 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.29 மணிக்கு விஜய வருடம் பிறப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. ஏறத்தாள ஒன்றரை மணிநேரங்கள் வித்தியாசம்.

இது விடயத்தில் மட்டும் என்று இல்லாமல் வேறு பல விடயங்களிலும் இரண்டு பஞ்சாங்கங்களும் ஒன்றுக்கொன்று விதண்டாவிதமாகவே குறிப்பிட்டுள்ளன. ஒருநாள் கூட தமிழ்த் தேதியில் மாறுபடுவதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இது பற்றிப் பரமர் கடந்த வருடமும் சங்கமம் பத்தியில் தெரிவித்து இருந்தேன். விஞ்ஞானத்தின் விளை நிலமாக இருக்கும் சாத்திர விதி முறைகள் மாறுபட்டதாகத் தெரிவிப்பது மக்களை குளப்பி கூத்துப் பார்க்கும் மிகப்பாரதூரமான குற்றம் என்பதை இவர்கள் எப்பதான் உணரப்போகிறார்களோ?

நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்என்னும் துணியில் நடைபெறுகின்ற விதண்டாவாதத்தால் சாத்திரம் பொய் எண்ட கருத்து மக்களிடையே மென்மேலும் வளர வழிவகுக்கும்.


"எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்" "பாடியவன் பாட்டைக்கெடுத்தான்" எண்டதைப்போல இங்கே வெளியிடப்படுகின்ற இரண்டு பஞ்சாங்கமும் அமைந்துள்ளன.

கிரகங்கள் இவர்களுக்கு மாறுபட்டுத் தோன்றுவதைப் போன்று இன்னொரு பங்சாங்கம்தோன்றுமாயின் அதுவும் வெறொரு நேர அட்டவணையைத்தானே வழங்கப்போகிறது.

"மந்திரம் கால் மதி முக்கால்" என்பினம் நாட்டிலுள்ள செய்திப் பத்திரிகைகளைப் போல செய்தி ஒன்றிருக்க வேறொன்றை மக்களுக்கு நேரக்கணிப்பீடுகளை வழங்கும், சாத்திரம் சம்பந்தமான பஞ்சாங்க நூல்கள் பதிப்பிக்கக் கூடாது.

சரியான சாத்திர நேரக் கணிப்பீடுகளை நடுநிலை நிண்டு தரக்கூடிய புதிய பஞ்சாங்கம் இந்த மண்ணில் தோன்ற வேண்டும். லாப நஷ்டம் பார்க்கும் வர்த்தக விசயமில்லையே இது. என்ன நான். சொல்லுறே...

# 5000 சிறுவர் நேயப்பாடசாலைகள் புத்தாண்டு விடுமுறையில் அபிவிருத்தி



(கொழும்பு)

புத்தாண்டு மற்றும் தவணை விடுமுறை காலப்பகுதிக்குள் நாடு முழுவதிலும் உள்ள 5000 சிறுவர் நேயப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாடசாலை ஒன்றுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா வீதம் ஐயாயிரம் பாடசாலைகளுக்கும் 250 கோடி ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டு விடுமுறை காலப்பகுதிக்குள் நாடு முழுவதிலும் சமகாலத்தில் இந்த சிறுவர் நேயப் பாடசாலைகளைப் புனரமைக்கும் மற்றும் அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நவீன வசதிகள், ஆய்வு கூடங்களைக் கொண்ட ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 409 பாடசாலைகளின் நிர்மான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மேலும் 175 பாடசாலைகள் உலக வங்கியின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் 255 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பாடசாலைகளுக்குத் தேவையான விஞ்ஞான, கணித, ஆங்கில பாட ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பரீட்சைக்கான ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் தெரிவித்தார்.

1968, இலக்கம் இருபத்தைந் திற்கமைய பரீட்சை ஷரத்தின் மூன்று ஒன்று என்ற ஷரத்திற்கமையவே இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம். என். ஜே. புஸ்பகுமார இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சுகாதாரதொழிலாளர்களுக்கு தொடர்மாடி குடியிருப்பு

யாழ். மாநகர சபையில் கடமையாற்றும் சுகாதார தொழிலாளர்களுக்கு யாழ் திருநகர் பகுதியில் தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றை அமைப்பதற்கு யாழ். மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த தொடர்மாடி குடியிருப்பை அமைக்க தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாகவும் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த பகுதிக்குச் சென்று அது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையின் சுகாதார குழுத்தலைவர் சுதர்சிங் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் யாழ். மாநகர சபை சுகாதார தொழிலாளர்களுக்கு அல்பிரட் துரையப்பா மாநகர முதல்வராக இருந்த காலத்தில் 56 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருந்த போதும் இது வரை இதற்குரிய காணி உரிமங்கள் வழங்கப்படவில்லை என்று அதனை வழங்க மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த குடியிருப்பை அமைக்கவுள்ள நிறுவனத்துடன் விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்திடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(02)



சித்திரை புத்தாண்டை முன்னிட்டு யாழ்.நகரில் புடவை வியாபாரம் களை கட்டியுள்ளது. மக்கள் ஆர்வத்துடன் புத்தாடைகளை கொள்வனவு செய்வதைக் காணலாம்.

(பாடம். ஆர்.ராஜகுமார்)

# புகலிடக்கோரிக்கையாளர் கிறிஸ்மஸ் தீவிற்கு மாற்றம்

அவுஸ்ரேலியாவின் பேர்த் ஜெர்லாடன் துறைமுகத்தில் தரை இறங்கிய புகலிடக் கோரிக்கையாளர்கள் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். விசேட விமானமொன்றின் மூலம் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 66 புகலிடக் கோரிக்கையாளர்கள் ஜெர்லாடன் துறைமுகத்தைச் சென்றடைந்திருந்தனர்.

இதேவேளை குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் விசாரணை எதனையும் நடத்தாது நாடு கடத்த முயற்சித்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என புகலிடக் கோரிக்கையாளர் நல அமைப் பின் பேச்சாளர் விக்டோரியா மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களின் கோரிக்கைகளை அவுஸ்ரேலிய அரசாங்கம் உரிய முறையில் கவனிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். சட்ட திட்டங்களுக்கு அமைவாக புகலி டக் கோரிக்கையாளர்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

# நிதி மோசடியில் ஈடுபட்ட இலங்கையருக்கு சிறை



நிதி மோசடியில் ஈடுபட்ட இலங்கையருக்கு பிரித்தானியாவில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பொதுநலவாய நாடுகள் அமைப்புச் செயலகப்பணத்தை மோசடி செய்ததாக இவர் மீது குற்றம் சுமத தப்பட்டுள்ளது. 31 வயதான பிரதீப் மூர்த்தி என்ற இலங்கையருக்கு 20 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 3,75,000 ஸ்ரேலிங் பவுண்ட் பணத்தை மோசடி செய்ததாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

நன்கொடை நிதிகளைக் கையாடல் செய்ததாகவும், அதற்கு போலிக் கணக்கு விபரங்களைக் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த இலங்கையர் சூதாட்டப் பழக்கமுடையவர் எனவும், இந்தப் பணத்தை சூதாட்டத்தில் ஈடுபடுத்தியிருக்கலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

# தென்னிந்திய திரைப்படங்களை தடைசெய்ய வேண்டாம்

(கொழும்பு)

தென்னிந்திய திரைப்படங்களைத் தடை செய்யக் கூடாது என பிரபல சிங்கள நடிகை மாலினி பொன்சேகா தெரிவித்துள்ளார். தமிழ் மக்களைப் போன்று நாமும் தென் இந்திய திரைப்படங்களை விரும்பி ரசிக்கின்றோம்.



தென்னிந்திய கலைஞர்களின் ஆற்றலை நாம் பாராட்டுகின்றோம். தென்னிந்திய திரைப் படங்களை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்யை நாம் முன் வைக்கவில்லை.

குறிப்பிட்ட ஒரு தரப்பினரின் கருத்து நாட்டில் உள்ள அனைத்து பௌத்த பிக்குகளின் கருத்தாக அமையாது.

இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதற்குத் தமிழகத் திரைப் படங்களைத் தடை செய்வது பொருத்தமற்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் தமிழ்த் திரைப்படங்களை தடை செய்வதனால் இந்தியாவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என கொழும்பில நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின் போது அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 26 பேருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்கள் 26 பேரைக் கரையோரப் பாதுகாப்புப் படையினர் மற்றும் கடற்படையினர் கைதுசெய்து கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் 26 பேரையும் கடற்றொழில் திணைக்களம் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்ப்படுத்திய வேளை, 26 பேரையும் நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் நேற்றுமுன்தினம் மீண்டும் ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை, பதில் நீதவான் ஆர். சபேசன் எதிர்வரும் 19ஆம் திகதி வரை இவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும், மீனவர்களின் படகுகள் மற்றும் இயந்திரங்களை கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறும் கடற்றொழில் திணைக்கள அதிகாரியிடம் உத்தரவிட்டார். (25)

# ஜே.வி.பி முறைப்பாடு பொலிஸார் விசாரணை



(கொழும்பு)

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய விசேட விசாரணை நடாத்துமாறு பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளார்.

மாத்தளை மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் கடந்த செவ்வாய் இரவு பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் சிலர் நடமாடியதாக மக்கள் விடுதலை முன்னணி முறைப்பாடு செய்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இது குறித்து பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோனுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இராணுவ உடையை ஒத்த உடை அணிந்த 10 பேர் மாத்தளை மனித புதைகுழி பகுதியில் நடமாடியதாக அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.


இந்த முறைப்பாடு குறித்து ஆராய்ந்து விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர், மாத்தளை வலய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு பணித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்தார்.

# க.பொ.த (சாதாரணதர) மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

## விஞ்ஞானம்

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

01) மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர்களால் பாடசாலையில் அமைக்கப்பட்ட மாதிரிக்குளம் ஒன்றின் வெட்டுமுகப்படம் தரப்பட்டுள்ளது.





அ) 1. இது நன்னீர்ச்சாகிய மாவதற்குரிய ஒரு விடயத்தைத் குறிப்பிடுக?
2. இங்கு அவதானிக்கக்கூடிய மூன்று இணைப்புடைய உணவுச் சங்கிலி ஒன்றை எழுதுக.
3. நத்தை சார்ந்துள்ள அங்கிக் கணம் எது?
4. ஐதரில்லாத் தாவரம் ஒளித்தொகுப்பிற்குத் தேவையான $CO_2$ ஐ எப்படிப்பெறுகிறது?

ஆ) 1. நீரின் இரசாயனப் பிணைப்பைக் காட்டும் குற்றுப்புள்ளிப் படம் வரைக?
2. இக்குளத்தில் மழைகாலத்தின்பின் யூரியா $CO(NH_2)_2$ எனும் சேர்வையின் செறிவு அதிகரித்துக் காணப்பட்டது. யூரியாவின் சூத்திரத்திணிவைக் காண்க? (C-12, O-16, H-1, N-14)
3. நீரில் கரைய முடியாத பலாப்பால் தேங்காய் எண்ணெயில் ஏன் கரைகிறது?
4. நீரின் அமில/கார இயல்பை எவ்வாறு சோதித்து அறியலாம்?


இ) 1. அணைக்கட்டின் அடித்தளம் அகலமாகக் கட்டப்பட்டது ஏன் என விளக்குக?
2. நீரின் அடர்த்தி $10^3kgm^{-3}$ எனில் குளத்தின் அடியில் உள்ள நத்தையின் முதுகில் தாக்கும் அமுக்கம் யாது?
3. இக்குளத்தில் 6Kg கல் ஒன்று போடப்பட்டபோது இடம்பெயர்க்கப் படும் நீரின் நிறை யாது?
4. அக்கல் முற்றாக அமிழ்வதைத் தடுத்து மிதக்கவைக்க செய்யப்படக் கூடிய உத்தியொன்றைப் பிரேரிக்குக?

02)




அ) இனப்பெருக்கம் தொடர்பாக குழுத்தொழிற்பாடு ஒன்றிற்கு மாணவர் குழு சேகரித்த தாவரப் பகுதிகள் தரப்பட்டுள்ளன.
1. அவற்றை இனம் காண்க I.A........................ II.B........................ III.C................................ IV.D................................
2. இவற்றில் பதியமுறை இனப்பெருக்கத்தைத் தரும் பகுதி/பகுதிகள் எவை?
3. இலிங்கமுறைக்குரிய பகுதிகளில் ஆண் பகுதிக்குரிய பகுதிகளைக் குறிக்கும் ஆங்கில் எழுத்து/எழுத்துக்கள் எவை?
4. பதியமுறை இனப்பெருகத்தில் மாறாது பேணப்படும் இயல்பு எது?

ஆ)




1. தரப்பட்ட கட்டமைப்பை இனம்காண்க?
2. இதில் பிரதேசங்கள் A,B யில் நடைபெறும் தொழிற்பாடுகள் எவை? A........................ ........................ B........................................
3. A யில் நடைபெறும் தொழிற்பாட்டிற்குரிய சிறப்பியல்புகளில் X கொண்டுள்ள இரு சிறப்பியல்புகளைத் தருக?
4. அங்கிகளின் நிலவுகைக்கு அவசியமான சக்தி நிலைநாட்டும் தாக்கத்திற்கான சமன்பாட்டை எழுதுக?


இ) 1. நீரில் வாழும் மீன்கள் எப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன?
2. அப்பிரிவிற்குரிய ஒரு சிறப்பியல்பை எழுதுக?
3. சூழற்தொகுதி ஒன்றில் அங்கிகள் அடக்கப்படும் மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக?
4. மனிதனில் ஆண்களை மட்டும் தாக்கக்கூடிய பரம்பரை நோய் ஒன்றைக் குறிப்பிடுக?

03) அ) 1. தரப்பட்ட மூலகங்களில் ஆவர்த்தனஅட்டவணையில் ஒரே கூட்டத்தில் உள்ளவை எவை?

| மூலகம் | P | Q | R | S | T | U |
|---|---|---|---|---|---|---|
| திணிவெண் | 16 | 19 | 20 | 23 | 32 | 40 |
| அணுஎண் | 08 | 09 | 10 | 11 | 16 | 20 |


2. Q உம் S உம் உருவாக்கும் சேர்வையில் மூலக்கூற்றுச் சூத்திரம் யாது?
3. மேற்படி மூலகங்களில் வாயுநிலையில் உள்ளவை எவை?
4. மூலகம் S ஆனது நீருடன் அடையும் மாற்றத்தைக் குறிக்கும் சமன்பாட்டை எழுதுக?

ஆ)





1. A,B,C அமைப்புக்களில் உமது அவதானம் யாது?
2. இங்கு அளிக்கப்பட்ட காட்டிகள் எவை?
3. Nacl பயன்படுத்தப்பட்டமைக்கான காரணம் யாது?
4. இப்பரிசோதனை முடிவு இரும்பின் எப்பாதுகாப்பு முறைக்கான அடித்தளத்தைத் தருகிறது?

இ)




1. தரப்பட்ட மின்கலம் எப்பெயரால் அழைக்கப்படும்?
2. இங்கு நேர்மின்வாய் எது?
3. இக்கலத்தில் ஏற்படக்கூடிய குறைபாடுகள் இரண்டு தருக?
4. நேர்மின் வாயில் நடைபெறும் மாற்றத்திற்கான சமன்பாட்டைத் தருக?


04) 1) P என்னும் பொருளானது 10m/s எனும் வேகத்துடன் இயங்க ஆரம்பித்து 60 செக்கனில் 40m/s வேகத்தைப் பெற்றுக்கொண்டது. இக்கூற்றுக்குப் பொருத்தமான வரைபை வரைக.





1. இப் பொருளில் ஏற்பட்ட வேகமாற்றம் யாது?
2. இதன் ஆர்முடுகல் யாது?
3. இதன்நிறை 2kg எனில் ஆர்முடுகலின்போது தொழிற்பட்ட விசை யாது?
4. இப்பொருள் பயணித்த மொத்தத் தூரம் யாது?

2) இலத்திரனியல் சுற்று ஒன்று ஆக்கப்பட்டு முனைவுகள் X,Y என்பவற்றில் தைனமோ ஒன்று பொருத்தப்பட்டு சுழற்றப்பட்டது.

3) 1. கூறுகள் A,B ஐ இனம் காண்க?
2. தைனமோ சுழற்றப்பட்டபோது உமது அவதானம் யாது?
3. கூறுகள் A,B யின் தொழிற்பாடு யாது?
4. மேற்படி செய்கையில் இருந்து எடுக்கக்கூடிய முடிவு யாது?




4)



1. தரப்பட்ட அலையின் அலைநீளம் யாது?
2. இவவலையானது 50Hz அதிர்வெண் உடையது எனில் அதன் வேகம் யாது?
3. பொறிமுறை அலைகளில் தீங்கானஅலை ஒன்றைக் குறிப்பிடுக?
4. கட்புலனாகும் குறுக்கலை ஒன்றைக் குறிப்பிடுக?

## பகுதி II

**மூன்று தொகுதி வினாக்களிலும் ஒன்று வீதம் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

A.


01) தாவரங்கள் தமக்குத் தேவையான பொருட்களை மண்ணில் இருந்தும் வளியிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றன.

அ) 1. நீர் கனிஉப்பு என்பனவற்றை தாவரம் உள்ளெடுக்கும் முறையாது?
2. ஒளித்தொகுப்பின்போது வளியில் சேர்க்கப்படும் கூறு எது?
3. ஒளித்தொகுப்பிற்கு தாவரம் பயன்படுத்தும் மூலப்பொருட்கள் எவை?

ஆ) 1. ஒளித்தொகுப்பின்போது களஞ்சியப்படுத்தப்பட்ட மாப்பொருள் எவ்விதம் உயர் விலங்கொன்றை அடைகிறது?
2. உணவுக் கால்வாயில் சமிபாடடைந்த மாப்பொருள் மூலக்கூறு ஒன்று இதயத்தை அடையும் பாதையைத் தருக?
3. புலன் உணர்ச்சியொன்றைப் பெற்று முன்னிலை அசைவைக் காட்டும் தாவரம் எது?


இ) 1. விலங்கு ஒன்றில் கொண்டு செல்வதற்கு குருதிக்கலன்கள் இருப்பதுபோல தாவரங்களில் கடத்தலுக்கு உதவும் கலன்கள் எவை?

02) I. மனித இதயத்தில் உள்ள பிரதான இரு குருதிக்கலன்கள் காட்டப்பட்டுள்ளன.




1. அவற்றை இனங் காண்க?
2. இவை எடுத்துச்செல்லும் குருதியின் அமைப்பு எவ் இயல்பில் வேறுபடுகிறது?
3. மனிதனின் குருதிச்சுற்றோட்டம் "இரட்டைக் குருதிச் சுற்றோட்டம்" என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

03) அ) பிளாஸ்ரிக் கொள்கலன் ஒன்று (1.5l சோடாப் போத்தல்) மூன்று இடங்களில் வெட்டப்பட்டு செலோபேன் தாளால் வெட்டிய இடங்கள் ஒட்டப்பட்டன. போத்தலினுள் உப்பு நீர் எடுக்கப்பட்டது. மூடியுடன் வளி இறுக்கமாக சேலைன் குழாய் பொருத்தப்பட்டு படத்தில் உள்ளவாறு ஒழுங்கமைக்கப்பட்டது.




1. இங்கு பெறக்கூடிய அவதானம் யாது?
2. செலோபேன் தாளிற்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய இயற்கை மென்சவ்வு ஒன்று தருக?
3. உமது அவதானத்திற்கு காரணமான செயற்பாட்டை எவ்வாறு அதிகரிக்கச் செய்யலாம்?
4. இச்செயற்பாடு எந்த உடற்செயற்பாட்டில் அவதானிக்கப்படுகிறது?
5. நேரத்துடன் இச் செயற்பாடு அதிகரித்துள்ளது என்பதை அவதானிக்க உமது முன்னேற்பாடு ஒன்றைக் குறிப்பிடுக.

ஆ) கள ஆய்வுக் குழுவுக்குச் சென்ற மாணவர் குழு ஒன்று பின்வரும் அங்கிகளைச் சேகரித்தது.


தவளை, நத்தை, மீன், தாரா, மண்புழு, ஆமை

1. பின்வரும் கணங்களிற்கு உதாரணம் தருக?

I. அம்பிபியா- II. அனலிடா- III. ரெப்ரீலியா- IV. மொலஸ்கா-

2. தவளை, தாரா என்பவற்றின் புறத்தோற்ற இயல்பு ஒன்று ஒத்துக் காணப்படுகிறது. அது எது எனக் குறிப்பிடுக.


B. 01)




அ) மண்ணெய் விடப்பட்ட போத்தல் ஒன்றின் திணிவு 1.4 Kg. இது 3m உயரத்தில் வைக்கப்பட்டு பொலித் தீன் குழாயூடாக உலோகக்குழாய் ஒன்றினுள் செலுத்தப் பட்டது.

1. மண்ணெயில் உள்ள சக்தி வகை யாது?
2. அமைவிடம் காரணமாக போத்தலில் பெற்றுக்கொண்ட சக்தியைக் கணிக்க.
3. திருகி மூலம் மண்ணெய்வெளியேற்றப்பட்டபோது சிறு திவலைகளாக விசையுடன் சீறி வெளிப்பட்டது. அதற்குதவிய உத்திகள் இரண்டைக் குறிப்பிடுக.
4. எணணெயில் தீ மூட்டி சிறிது நேரத்தின்பின் நீலமாக எரிந்தமைக்குக் காரணம் யாது?
5. போத்தலைக் கையால் அழுத்தினால் சுவாலையில் ஏற்படக்கூடிய மாற்றம் யாது?

04) பொருட்தூரம்




விம்ப உயரம்


20 cm நீளமான ஒளிர் பொருளொன்று குவிவு வில்லை ஒன்றின் முன்வைக்கப்பட்டது. வில்லையில் இருந்து பல்வேறு நிலைகட்கு விமப உயரம் அமைக்கப்பட்டு வரையாக்கப்பட்டது. வரைபின்படி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

1. உருச்சிறுத்த விம்பம் எச்சந்தர்ப்பத்தில் பெறப்பட்டது?
2. இவ்வில்லையின் குவியத்தூரம் யாது?
3. 30 cm தூரத்தில் பொருள் வைக்கப்பட்டு விம்பம் பெற்ற செயற்பாடு எக்கருவியில் பயன்படுத்தப்படுகிறது?
4. எளிய நுணுக்குக்காட்டியாக வில்லையொன்று தொழிற்படுவதை கதிர்வரிப்பட மூலம் காட்டுக.

05) அ) 2m நீளம் 0.5m உயரம் 1m அகலம் கொண்ட கனக்குற்றியொன்றின் நிறை 20kg ஆகும்.

1. இக்குற்றியின் கனவளவு யாது? 2. இதன் அடர்த்தியைக் கணிக்க?
3. இக்குற்றியின் சிறிய முகம் தளமொன்றில் இருக்குமாறு வைக்கப்படின் அங்கு தோன்றும் அமுக்கம் யாது?

ஆ)



அம்பியர்மானி, வோல்ட்மானி, மின்குமிழ் என்பன படத்தில் காட்டப்பட்டுள்ளன.

1. B,D என்பவற்றை இனங்காண்க?
2. 6v மின்கலம் பூரண வலுவுடன் தொழிற்பட்டால் B,D யின் வாசிப்புக்களைத் தருக?
3. சகலவிதத்திலும் ஒத்த மின்குமிழ் ஒன்று இக்குமிழுடன் தொடராக இணைக்கப் படின் Dயின் வாசிப்பில் ஏற்படும் மாற்றம் யாது?
4. மின்கலத்தின் முனைவுகள் மாற்றப்பட்டால் மின்குமிழ் ஒளிராது இருப்பதற்காக PQ இற்கிடையே நீர்பொருத்தும் கூறு ஒன்றை வரைந்து காட்டுக.
5. இச்சுற்றில் உள்ள மின்குமிழ் ஒரு நிமிடத்தில் வெளியிடும் சக்தியின் அளவைக் கணிக்க?

C. 01) அ) உலோகங்களில் சில நீருடனும் ஐதான அமிலங்களுடனும் தாக்கமடைகின்றன. உலோகச் சேர்வைகளில் இருந்து உலோகங்களைப் பெற மின பகுப்பு முறையோ அல்லது தாழ்த்தும் கருவியோ பயன்படுத்தப் படலாம்.

1. மிகச்சிறிய துண்டு சோடியத்தை நீரில் இடும்போது அவதானிக்கக்கூடிய மாற்றங்கள் இரண்டு தருக.
2. இத்தாக்கத்துக்குரிய இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.
3. சோடியத்தின் அணுஎண் 11, திணிவெண் 23 எனில் அதன் குறியீட்டை நியமக் குறியீட்டில் தருக.
4. இரும்பு பிரித்தெடுக்கும்போது ஊதுலையில் இரும்புத்தாதுடன் கற்கரி, சுண் ணாம்புக் கல் என்பன சேர்க்கப்படுகின்றன. தாக்கமுடிவில் கற்கரி, சுண் ணாம்புக்கல் ஆகியவை எவ்வடிவில் வெளியேறுகின்றன?

ஆ) 1. நீர், அற்ககோல் என்பவற்றில் அயடினைக் கரைக்கக்கூடியது எது?
2. நீர் ஒரு சிறந்த கரைப்பானாக இருந்த போதிலும், ஏன் சில பொருட்கள் நீரில் கரைவதில்லை எனக்கூறுக?
3. $0.2moldm^{-3}$கரைசல் தயாரிக்க $500\ cm^3$ நீரில் எடுக்க வேண்டிய எரிசோடாவின் திணிவு யாது?
4. ஐதரசன் வாயுவை இனம் காணும் சோதனை எது?
5. சமிபாட்டுக்கோளாறுக்கு உள்ளெடுக்கப்படும் மருந்து வில்லை நன்கு மென்று விழுங்கப்படுவதால் உடனடியாக நிவாரணம் கிடைப்பது எவ்வாறு எனக்கூறுக?

02 அ) மூலகங்களினால் சடப்பொருட்கள் ஆக்கப்படுகின்றன. எல்லா மூலகங்களிலும் ஆக்க அலகாக உள்ளது அணுவாகும். அணுக்களின் பௌதீக இயல்புகளும் இரசாயன இயல்புகளும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட்டவை.


1. அணுஎண் 14 உடைய மூலகமும் அணுஎண் 9 உடைய மூலகமும் ஏற் படுத்தும் பிணைப்பு வகை எது?
2. மேற்கூறப்பட்ட அணுஎண் 14 உடைய மூலகம் ஆவர்த்தன அட்டவணை யில் எந்தக் கூட்டம் எந்த ஆவர்த்தனத்தில் அமைந்திருக்கும் எனக்கூறுக?
3. அங்கு அது இருக்கும் இடம்காரணமாக கொண்டிருக்கும் இயல்பு ஒன்றைக் குறிப்பிடுக?

ஆ. 1. ஆய்வுகூடத்தில் சோடியம் எவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது?
2. சோடியம் நீரில் இடப்படும்போது கிடைக்கும் ஒரு அவதானம் இத்தாக்கம் அகவெப்பத் தாக்கமா? புறவெப்பத்தாக்கமா? என அறிய உதவும். அவ் அவதானத்தைக் குறிப்பிடுக?

1. சுண்ணாம்புக்கல்லில் அடங்கியுள்ள பிரதான இரசாயனப் பொருள் யாது?
2. அது வெப்பப் பிரிகை அடையும் சமன்பாட்டை எழுதுக?
3. 50g தூய அப்பதார்த்தத்தை வெப்பமாக்கிப் பெறக்கூடிய கல்சியம் ஒட்சைட்டின் நிறையைக் காண்க. (Na-23, Ca-40 C-12) (O-16 S-32 H-1)

4. ஐதரசன் வாயுவை வர்த்தக ரீதியில் தயாரிக்கப் பயன்படும் முறை ஒன்றைக் குறிப்பிடுக

03)




1. மனித உடலின் சில பகுதிகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

I. A,B,C,D, E பகுதிகளைப் பெயரிடுக.
II. கசியிழையத்தினால் ஆக்கப்பட்ட பகுதி எது/எவை?
III. சுவாசப்பாதையில் காணப்படும் இழைய வகையைப் பெய ரிட்டு அதன் அமைப்பை வரைக.
IV. பகுதி Eயில் காணப்படும் சிறப்பியல்புகள் நான்கு தருக.
V. வளி உள்ளெடுக்கப்படுகையில் பகுதிகள் A,Dயின் நிலையை விளக்குக.
VI. சுவாசச் செயற்பாட்டில் காற்றுச் சுவாசம், காற்றின்றிய சுவாசம் ஆகியவற்றை வேறுபடுத்துக.
VII. தரப்பட்ட அமைப்புக்கும் பகுதி Gக்குமான இணைப்பை வரைக.


(அண்ணளவாக)

# ஈரானின் அணுசக்தித் திட்டம்

# இராஜதந்திர தீர்வு அவசியம்

## பிரதமர் மன்மோகன் வலியுறுத்து

ஈரான் அணுஆயுத உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் பல்வேறு செயற்திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது என்று அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.



இதனால் அமெரிக்கா மற்றும் ஐ.நா.வின் பொருளாதரத்தடைகளை ஈரான் சந்தித்து வருகிறது.

இந்நிலையில் ஜேர்மன் சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஈரான் தனது குடிமைப்பணிகளுக்காக அணு உற்பத்தியை தொடர உரிமை இருக்கிறது. எனவே, சர்ச்சைக்குரிய இந்த அணுசக்தித் திட்டங்கள் குறித்து இராஜதந்திர தீர்வுகள் காணப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவிற்கு தேவையான எண்ணெய் வளத்தை வழங்கும் முக்கிய நாடாக ஈரான் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### இந்தியச் செய்திகள்

## பாதுகாப்புச் செயலரின் கருத்து

# அமைச்சர் நாராயணசாமி கண்டனம்



இலங்கையின் உள்நாட்டு தீவிரவாதத்தை இந்தியா ஊக்குவித்ததாக இலங்கைப் பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கு, அமைச்சர் நாராயணசாமி கண்டனம் தெரிவித்தார்.

இந்தியா பொறுப்புடன் நடந்துகொண்டிருந்தால், விடுதலைப் புலிகளுடனான போர் 30 ஆண்டு நடந்திருக்காது என இலங்கை பாகாப்புத்துறைச் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார். இந்தக் கருத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள அமைச்சர் நாராயணசாமி, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும் போது கூறியதாவது,

இலங்கையில் தீவிரவாதத்தை இந்தியாதான் தூண்டிவிட்டது என்று கோத்தாபய ராஜபக்ஷ கூறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. உலகத்தில் எந்தப் பகுதியில் தமிழர்கள் இருந்தாலும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது மத்திய அரசின் கடமை. அதனை மத்திய அரசு எப்போதுமே சிறப்பாக செய்து வருகிறது.

ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராக இருந்த போது கூட ஈழத் தமிழர்கள் நலனுக்காக அமைதிப்படையை அனுப்பினார் என்று நாராயண சாமி கூறினார்.

மேலும், இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர் கள் தாக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இதற்காக, கடற்பகுதியில் கடலோர காவற் படையினர் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

## வறுமையை அகற்ற உலக வங்கிகடனுதவி


இந்தியாவுக்கு ஒரு ஆண்டில் 3 பில்லியன் முதல் 5 பில்லியன் (சுமார் 2 இலட்சத்து 72 ஆயிரம் கோடி) வரை கடன் வழங்கப்படும் என்று உலக வங்கி நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

இந்த நிதி நாட்டின் பின்தங்கிய மாநிலங்களின் வளர்ச்சிக்காகத் தீட்டப்பட்ட 4 ஆண்டு திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. முன்னதாக இந்த மாத தொடக்கத்தில் உலக நாடுகள் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் ஏழ்மையை, உலகத்தை விட்டே விரட்ட வேண்டும் என்று உலக வங்கியின் தலைவர் ஜிம் யாங் கிம் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கடனைக் கொண்டு இந்தியாவில் ஏழைகளில் 5.5 சதவீதம் பேரை 2030ஆம் ஆண்டுக்குள் வறுமையிலிருந்து மீட்க உலக வங்கி திட்டமிட்டுள்ளது.

# சஞ்சய் காந்தியைக் கொல்ல 3 முறை முயற்சியென தகவல்

இந்திரா காந்தியின் இளைய மகனான சஞ்சய் காந்தியைக் கொலை செய்வதற்கு மூன்று முறை முயற்சி நடந்தது என அமெரிக்கத் தூதரக தகவலை மேற்கோள் காட்டி விக்கிலீக்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



உத்தரப் பிரதேசத்திற்கு ஒரு முறை அவர் வந்தபோது மிகவும் சக்தி வாய்ந்த துப்பாக்கியால் அவரை சுட்டுக்கொல்ல முயற்சிக்கப்பட்டது என்றும் அந்த அமெரிக்க கேபிள் தகவல் தெரிவிக்கிறது.

1976ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்க தூதரகம் அனுப்பிய கடிதத்தில், பிரதமர் இந்திரா காந்தியின் இளைய மகன் சஞ்சய் காந்தியை அடையாளம் தெரியதா நபர் ஒருவர் கொலை செய்வதற்கு மிகவும் சாதுரியமான முறையில் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அது தோல்வியில் முடிந்தது என்று கூறப்பட்டுள்ளது. அவசர நிலை காலகட்டத்தில் இந்த முயற்சி நடந்துள்ளது.

ஆகஸ்ட் 30 அல்லது 31ஆம் திகதி இந்தத் தாக்குதல் நடந்தது. அப்போது சஞ்சய் காந்தியை மூன்று முறை அந்த நபர் சுட்டார். ஆனால் சஞ்சய் காந்தி பெரும் காயம் ஏதுமில்லாமல் உயிர் தப்பி விட்டார் என்று கூறப்பட்டுள்ளது. இந்திய உளவுத்துறையிடமிருந்து இந்தத் தகவல்களைப் பெற்றதாகவும் அமெரிக்கத் தூதர் தனது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

இதுகுறித்து உளவுத்துறையினரிடம் பேசியபோது சஞ்சய் காந்தியைக் கொல்ல நடந்த 3வது முயற்சி இது என்று தெரிவித்தனர்.

உ.பியில் நடந்த இந்தத் துப்பாக்கிச் சூட்டில் குற்றவாளி மிகவும் நவீன மான துப்பாக்கியைப்பயன்ப டுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது என்று அந்த கடிதம் கூறுகிறது.

சஞ்சய் காந்தி தனது தாயாரைப் போலவே மிகவும் தைரிய மானவர், அதிரடியாக, ஆணித்தரமாக செயறபடுபவர். இதனால் அவருக்கு எதிரிகளும் அதிகம் இருந்தனர் என்றும் அமெரிக்க தூதரின் கடிதம் சொல்கிறது.

## பிரதமர் வேட்பாளர் யார்?

# பா.ஐ.வுக்கு முற்றும் நெருக்கடி



பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்த அதன் கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதா தளம் முடிவு செய்துள்ளது.

அந்தக் கட்சியின் இரண்டு நாள் தேசிய செயற்குழுக் கூட்டம் டில்லியில் இன்று தொடங்குகிறது. அதில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு மேற்கொள்ள வேண்டிய உத்திகள் குறித்து விவாதிக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. ஐக்கிய ஜனதாத் தள கட்சியின் தலைவர் சரத் யாதவிடம் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோடியை அறிவித்தால் ஏற்றுக்கொள்வீர்களா? எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு நேரடியாக பதிலளிக்காத அவர், மதச்சார்பின்மை விடயத்தில் ஐக்கிய ஜனதா தளம் ஒருபோதும் சமரசம் செய்து கொண்டதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோடி அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்து வருவதாக கூறப்படுவது பற்றி செயற்குழுவில் விவாதிக்கப்படுமா? என்று கேட்டபோது எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட இருப்பதாக சரத் யாதவ் கூறினார்.

# இன்னிசைக் குரலுக்கு ஓய்வு

# லதாமங்கேஷ்கர் அறிவிப்பு

திரைப்படப் பாடல்கள் பாடப் போவதில்லை என, பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகி, லதா மங்கேஷ்கர் அறிவித்துள்ளார்.

பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகிகளில், "கானக்குயில்" என்ற பெயரெடுத்தவர், லதா மங்கேஷ்கர். இவர், மும்பை நகரில் நடைபெற்ற, "தீனாநாத் மங்கேஷ்கர்" விருது வழங்கும் நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். அப்போது கூறியதாவது,

சங்கீத உலகில் எதிர்பார்க்காத அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த பரிணாம வளர்ச்சி, வரவேற்கப்பட வேண்டியது என்றாலும், என்னை அதில் ஐக்கியப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

சமீப காலத்தில், திரைப்படங்களுக்கு பாடல்கள் பாடினேன். ஆனால், என் பணியை நான் தொடர முடியாத நிலையில் உள்ளேன். இந்த சூழ்நிலையில், பின்னணிப் பாடகியாக நீடிப்பதில், எனக்கு விருப்பம் இல்லை.

அதனால், இனி பாடுவதை நிறுத்திக் கொள்ளப் போகிறேன். இவ்வாறு லதா மங்கேஷ்கர் கூறினார். தன், 13ஆவது வயதில், பாடல் பாடுவதை தொர்டக்கிய, லதா மங்கேஷ்கர், 36



மொழிகளில் பாடல்கள் பாடி, தன் இன்னிசை குரலுக்கு மொழி பேதங்கள் இல்லை என்பதை, இசை இரசிகர்கள் மத்தியில் தெளிவுப்படுத்தியுள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# அணுகுண்டு சோதனை நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## வடகொரியாவை எச்சரிக்கும் ஜி 8



(இலண்டன்)

அணுகுண்டு மற்றும் ஏவுகணை சோதனை நடத்தப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வட கொரியாவுக்கு "ஜி 8" நாடுகள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கொரிய தீபகற்பத்தில் வட கொரியா போர்ப் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தென் கொரியா மற்றும் அமெரிக்கா மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்துவோம் என மிரட்டி வருவதுடன் அதற்கான ஆயத்த வேலைகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், வளர்ந்த நாடுகள் என்றழைக்கப்படும் "ஜி 8" நாடுகளின் கூட்டம் இலண்டனில் 2 நாட்கள் நடந்தன. அதில், அந்த நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, வடகொரியா மீது "ஜி 8" நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி பேசும் போது, வடகொரியா மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்தப்போவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனால், கொரிய தீபகற்பத்தில் தேவையற்ற பதட்டம் நிலவுகிறது. மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்தினால் அந்த நாட்டின் மீது மீண்டும் பொருளாதாரத் தடைவிதிக்கப்படும் என எச்சரித்தார்.

இதுபோன்று "ஜி 8" நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்கள் வடகொரியாவின் செயலுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து முடிவில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில், வடகொரியா அணுகுண்டு மற்றும் ஏவுகணைகளைத் தயாரித்து சோதனை நடத்தி வருவது கண்டிக்கத்தக்கது. அதற்கான யுரேனியம் செறிவூட்டுதலிலும் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலை மேலும் தொடர்ந்தால் வடகொரியா மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர வடகொரியா தொடர்ந்து நடத்தும் அணுகுண்டு சோதனை சர்வ தேச நாடுகளின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே, வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா.பாதுகாப்புச் சபை கொண்டுவந்துள்ள தீர்மானங்களுக்கு ஆதரவும் தெரிவிக்கப்பட்டது.


வடகொரியா மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்தினால் அதன் மீது ஐ.நா. சபை கொண்டு வர இருக்கும் பொருளாதாரத் தடை தீர்மானத்துக்கு ஆதரவு தருவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலியும் கலந்து கொண்டார். அப்போது புரட்சி நடைபெற்று வரும நாடுகளில் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள் நடைபெற்று வருவதாக கூறி கண்டனம் தெரிவித்தார்.

மேலும், சிரியாவில் பொதுமக்களை இராணுவம் கொன்று குவிப்பதற்கு எதிர்ப்பும், அதிருப்தியும் தெரிவிக்கப்பட்டது.

உலகச் செய்திகள்

## சனிக்கிரக மழை காரணம் கண்டறிவு



சனிக்கிரகத்தில் மழை பெய்வதற்கு, அதைச் சுற்றியுள்ள வளையம் போன்ற பகுதிதான் காரணம் என்று அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அவர்களின் கண்டுபிடிப்புகளை ஆய்வு செய்து இலண்டனில் உள்ள லெய்ஸடர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.இது குறித்து விஞ்ஞானிகள் கூறியுள்ளதாவது- சனிக்கிரகத்தை சுற்றியுள்ள வளையத்தில் இருக்கும் மின்னூட்டப்பட்ட தண்ணீர் மூலக்கூறு அணுக்கள், அக்கிரகத்தின் வளி மண்டலத்தில் மழையாகப் பெய்கிறது. இந்த மழைப் பொழிவு அக்கிரகத்தின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகிறது.

மழைப் பொழிவு காரணமாக சனிக்கிரகத்தின் மேல் பகுதி வெப்ப நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இதன் மூலம், அந்தக் கிரகத்தின் வளையம் போன்ற பகுதிக்கும், அக்கிரக்த்தின் வளி மண்டலத்துக்கும் இடையே தொடர்புள்ளதைக் கண்டறிந்துள்ளோம் என்றனர்.சூரிய மண்டலத்தில் இரண்டாவது பெரிய கிரகமான சனியை சுற்றி அபூர்வமான வளையம் காணப்படுகிறது. இந்த வளையம் முழுவதும் பனித் துகள்களும், சிறு கற்களும். வாயுக்களும் நிரம்பியுள்ளன.

## 23 மொழிகளில் பேசி அசத்தி உலகை ஈர்த்துள்ள சிறுவன்

### சுயகற்றலே காரணம்



(நியூயோர்க்)

அமெரிக்காவைச் சேர்ந்த திமோதி டோனர் என்ற 17 வயதுச் சிறுவன், 23 மொழிகளில் பேசி உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறான். நியூயோர்க்கைச் சேர்ந்த திமோதி டோனருக்கு, சிறுவயது முதலே பல்வேறு மொழிகளைக் கற்றுக்கொள்வதில் அதிக ஆர்வம் இருந்தது.

இதற்காக அவர் பெரிய பயிற்சி நிறுவனங்கள் எதையும் நாடவில்லை. மாறாக, அன்றாடம் தான் தொடர்பு கொள்ளும் நபர்கள் மூலமாகவே தனது மொழிப் பயிற்சியை வளர்த்திருக்கிறார். உள்ளூர் கார்ச்சாரதிகளுடன் அடிக்கடி பேசுவது, ஹோட்டல்களில் சந்திக்கும் நபர்களுடன் தொடர்ந்து பேசிப் பழகுதல் மற்றும் ஈ-மெயில் மூலம் உலகம் முழுவதிலும் உள்ளவர்களுடன் பழகி, அவர்களின் மொழியைப் பற்றி அறிந்துள்ளார்.

இவ்வாறு இந்தி, அரபு, குரோஷியன், டச்சு, ஆங்கிலம், பார்சி, பிரெஞ்சு, ஜேர்மன், ஹவுசா, ஹீப்ரு, இந்தோனேசியன், இஷிஹோசா, (தென் ஆபிரிக்க ஆட்சி மொழி), இத்தாலி, மாண்டரியன், ஒஜிப்வே (அமெரிக்க உள்ளூர் மொழி), பெர்சியன், பாஷ்டோ, ரஷ்யன், ஸ்பானிஷ், ஸ்வாஹிலி, துருக்கிஷ், வோலோப், யித்திஷ் என 23 மொழிகளையும் கற்றுத் தேர்ந்துள்ளான்.

## லேசர் மூலம் தாக்குதல் நடத்தும் அமெரிக்காவின் புதிய ஆயுதம்




வடகொரியா - தென் கொரியா இடையிலான மோதல் போக்கு காரணமாக, கொரிய தீப கற்பத்தில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்கா புதிய ஒரு ஆயுதத்தை பரிசோதித்துப் பார்த்துள்ளது. லேசர் தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஆயுதம், இது வரை பயன்பாட்டில் இல்லாத ஒரு ஆயுதமாக இருக்கும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

போர்க் கப்பல்களில், லேசர் ஆயுதங்களை நிறுவி, அவற்றின் மூலம் எதிரி ஏவுகணைகள், போர் விமானங்கள் மற்றும் உளவு விமானங்களைத் தாக்கி அழிக்கும் தொழில்நுட்பத்தை அமெரிக்கா அண்மையில் பரிசோதித்து பார்த்துள்ளது.

கப்பலில் உள்ள லேசர் ஆயுதம், குறிப்பிட்ட உளவு விமானத்தை குறிவைத்து தொடர்ந்து லேசர் கதிரை வீசச் செய்கிறது. தொடர்ந்து ஒரே இடத்தில் வெப்பம் அதிகரிப்பதால், அந்த இடத்தில் தீப்பிடிக்கிறது. இதனால் கட்டுப்பாட்டை இழக்கும் உளவு விமானம் கடலில் விழுகிறது.

அமெரிக்காவின் இந்த ஆயுதக் கண்டுபிடிப்பு, கடற்போர் யுக்திகளை மாற்றியமைக்கும் என அந்நாட்டு கடற்படை உயரதிகாரியான அட்மிரல் க்ளூண்டர் தெரிவித்துள்ளார். பல கோடி ரூபா செல்விட்டு ஏவுகணை தயாரித்து போர் விமானம் அல்லது உளவு விமானத்தை சுட்டு வீழ்த்துவதை விட, சில டொலர்கள் செலவில் லேசர் கதிர்களை செலுத்தி விமானத்தை வீழ்த்துவது, பொருளாதார ரீதியாகவும், போர் யுக்தி அடிப்படையிலும் சிறந்தது என அவர் கூறியுள்ளார்.

## இராணுவத்தின் தாக்குதலில் சிரியாவில் 57பேர் உயிரிழப்பு



(பெய்ரூட்)

சிரியாவில் இராணுவம் நடத்திய தாக்குதலில் 57பேர் உயிரிழந்துள்ளதாக மனித உரிமை அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. தெற்கு சிரியாவின் டாரா மாகாணத்தில் உள்ள அல்-சனமெயின் மற்றும் காபாகெப் ஆகிய நகரங்களில் இராணுவம் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது.

வீடுகள் மீது வெடிகுண்டுகளை வீசியது. புரட்சிப்படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இந்தச் சண்டையில் 6 குழந்தைகள், 7 பெண்கள், 16 புரட்சிப் படை வீரர்கள் மற்றும் 16 அடையாளம் தெரியாத நபர்கள், 12 இராணுவ வீரர்கள் இறந்ததாக மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலையடுத்து அப்பகுதியில் உள்ள மக்கள் நிவாரண முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். கடந்த இரு தினங்களுக்கு முன், இராணுவத்தில் உள்ள சுமார் 12 வீரர்கள், புரட்சிப்படையில் சேர்ந்ததையடுத்து இந்தத் தாக்குதல் நடந்தது குறிப்பிடத்தக்கது.

## கொரிய தீபகற்பத்தில் போர் எவருக்கும் விருப்பமில்லை

### – அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு



அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் வோஷிங்டன் எடுக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

கொரிய தீபகற்பத்தில் போர் மூளுவதை யாரும் விரும்பவில்லை என்றும், வடகொரியா தனது அச்சுறுத்தும் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டிய தருணம் இது என்றும் ஒபாமா கூறியுள்ளார். நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் பான் கீ மூன் உடனான சந்திப்பிற்கு பின் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சீனா மற்றும் பிற நாடுகள் கொரிய தீபகற்பத்தில் தற்போது நிலவும் பதட்டமான சூழலை முடிவுக்கு கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும், வடகொரியா விடயத்தில் அமெரிக்கா கவனத்தோடு செயல்படுவதற்கும் பான் கீ மூன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

# இனவாத தீ மூட்டி எதற்கு எண்ணெய் வார்க்கிறார் சம்பிக்க

## சீறுகிறார் மனோ



கொழும்பு நகரில் சிங்களவர்களை விட தமிழர்கள் அதிகமாக வாழ்வதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இது அப்பட்டமான பொய்யாகும். கொழும்பு நகரில் 2 இலட்சத்து 4 ஆயிரத்து 520 சிங்களவர்களும், 1 இலட்சத்து 76 ஆயிரத்து 198 தமிழர்களும் வாழ்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் புள்ளி விபர திணைக்களம் 2011 ஆம் வருடம் நடத்திய சனத்தொகை கணக்கெடுப்பின்படி இதுதான் அதிகாரப்பூர்வ உண்மை.

சிங்கள மக்கள் மத்தியில் தேவையற்ற இனத்துவேச சிந்தனையை விதைப்பதற்காக இத்தகைய உண்மைக்கு புறம்பான தகவல்களை தெரிவிப்பதை அமைச்சர் சம்பிக்க ரணவக்க உடன் நிறுத்த வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரத்தில் வாழும் தமிழர், சிங்களவர் சனத்தொகை விபரங்கள் சம்பந்தமாக மனோ கணேசன் கூறியதாவது, கொழும்பு மாவட்டத்தில் 1,771,319 சிங்களவர்களும், 258,654 தமிழர்களும், 242,728 முஸ்லிம்களும் வாழ்கிறார்கள்.

ஏனைய சிறுபான்மை இன பிரிவினரையும் சேர்த்து கொழும்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 2,309,809 ஆகும். இதுபோலவே கொழும்பு மாநகரில் கொழும்பு மேற்கு, கிழக்கு, பொரளை ஆகிய மூன்று தொகுதிகளை உள்ளடக்கிய திம்பிரிகஸ்யாய பிரதேச செயலக பிரிவில் 125, 052 சிங்களவர்களும், 69,873 தமிழர்களும், 34,368 முஸ்லிம்களும் வாழ்கிறார்கள்.

வடகொழும்பு, மத்திய கொழும்பு ஆகிய இரண்டு தொகுதிகளை உள்ளடக்கிய கொழும்பு பிரதேச செயலக பிரிவில் 126, 345 முஸ்லிம்களும், 106, 325 தமிழர்களும், 79,468 சிங்களவர்களும் வாழ்கிறார்கள். எனவே கொழும்பு மாநகரில் 204,520 சிங்களவர்களும், 176,198 தமிழர்களும், 160,713 முஸ்லிம்களும் வாழ்கிறார்கள்.

ஏனைய சிறுபான்மை இன பிரிவினரையும் சேர்த்து கொழும்பு மாநகரின் மொத்த சனத்தொகை 555,031 ஆகும். இதில் எங்கே தமிழர்கள், சிங்களவர்களை விட அதிகமாக வாழ்கிறார்கள் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச்செயலாளர் சம்பிக்க ரணவக்கவிடம் கேட்க விரும்புகிறேன். இவர் முழு நாட்டுக்கும் பொறுப்பான ஒரு அமைச்சர். இன்று இவர் தனது அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர் பதவியையும் கட்சி பதவி போல் உண்மையை மறைத்து பொய் கூறுவதற்கு பயன்படுத்துவது இதன்மூலம் அம்பலமாகியுள்ளது.

இலங்கை வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவினர் இந்தப் பொய்களை கேட்டுக்கொண்டுதான் நாடு திரும்புகிறார்களோ என எனக்கு தெரியவில்லை. இனவாதக் கண்ணோட்டத்தில் கருத்து கூறப்போன சம்பிக்கவின் நம்பகத்தன்மை இன்று, இந்த பொய் தகவல்கள் மூலம் சந்தி சிரிக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள தூதரக வட்டாரங்களில், சம்பிக்க ரணவக்கவின் இந்த் உண்மைக்கு மாறான தகவல்கள் தேவையற்ற புள்ளிவிபர குழப்பங்களை ஏற்படுத்தியமை எனக்கு தெரியும் என்றும் அவர் தெரி வித்தார்.

# புத்தாண்டு தினத்தில் வைப்புச் செய்தால் பரிசில்

(யாழ்ப்பாணம்)

சம்பத் வங்கியில் புதுவருட காலத்தில் சேமிப்பினை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களில் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 55 அங்குல எல்.சி.டி. தொலைக்காட்சிப் பெட்டிகள் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இதனைத் தவிர வைப்புத் தொகைக்கேற்ப பயணப் பை, சுவர் மணிக்கூடு போன்ற உடனடிப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி வரையே இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

சுபநேரக் கொடுக்கல் வாங்கல்களுக்காக சம்பத் வங்கியில் அனைத்து கிளைகளும் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை திறந்திருக்கும்.

புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாட்டுப் பணத்தினை சம்பத் வங்கியூடாகப் பெறும் வாடிக்கையாளர்களுக்க பரிசுப் பொருள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# கோபம் வந்தால் பத்தும் பறந்திடும்

அரச சொத்திற்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில் இலங்கை தொலைத் தொடர்பு நிலையத்திற்கு சொந்தமான தொலைபேசி இணைப்பு வயர்களை வெட்டி எடுத்த சம்பவம் தொடர்பாக ஆவரங்கால் சர்வோதயா வீதியினை சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரும், அவரது உறவினரான 15 வயதுடைய இளைஞர் ஒருவரையும் அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி குறித்த வீதியில் தொலைபேசி இணைப்பு வயர்களை பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தொலைத் தொடர்பு ஊழியர்கள் குறித்த வீதியில் இடையூறாக இருந்த மரக்கிளைகளையும் வெட்டி அகற்றியுள்ளனர். இதனை அடுத்து அவ் இளைஞர் வேலை முடிந்து வீட்டிற்கு வந்து பார்த்த வேளை மரக் கிளைகள் வெட்டப்பட்டிந்தன. இதனை அடுத்து தன்னை கேட்காமல் வெட்டியதற்காக இரவோடு இரவாக தொலைபேசி வயர்களை அறுத்தெடுத்துள்ளாார். மறுநாள் ஊழியர்கள் வந்து பார்த்தவேளை வயர்கள் அறுக்கப்பட்டிருந்ததனை அவதானித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததனை அடுத்தும் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தும் பொலிஸார் அவ்விரு இளஞர்க்ளையும் கைது செய்து நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனர். (15)

# ரயில் சேவைகள் நிறுத்தம் பயணிகள் நடுத்தெருவில்

பிரதான ரயில் சேவைகளில் 8 ரயில் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. ரயில் சாரதிகள் கடமைக்கு சமூகமளிக்காமையினால் ரயில் சேவைகளை இடைநிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக அச்சபை அறிவித்துள்ளது.

ரயில் சாரதிகள் எடுத்த இந்த திடீர் தீர்மானத்தினால் தமிழ்-சிங்கள புதுவருட புத்தாண்டிற்கு தங்களுடைய சொந்த இடங்களுக்கு செல்லவிருந்தவர்கள் பெரும் சிரம்மங்களுக்கு முகம் கொடுத்தனர்.

# சிசுவின் சடலம் மீட்பு

(மாதகல்)

மாதகல் பகுதியில் கழிவு நீர் வாய்க்காலில் இருந்து குழந்தை ஒன்று சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். மக்கள் வழங்கிய தகவலையடுத்து இந்த சடலம் மீட்கப்பட்டதாகவும் இரண்டு மாதம் மதிக்கத்தக்க சிசுவின் சடலமே மீட்கப்பட்ட தாகவும் இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கொழும்பு...

பொருட்களை இறக்க மாட்டோம் என்று ஏற்கனவே கொழும்புத்துறைமுக பொதி இறக்கும் பணியாளர் சங்கத்தின் தலைவர் அண்மையில் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையுடன்...

இந்த முக்கிய விவகாரங்களை எதிர்கொள்வதற்கு எல்லா இலங்கையர்களுடனும், இலங்கையுடனும் பங்காளராக செயற்பட அமெரிக்கா தயாராக உள்ளது என்று ஜோன் ஹெரி குறிப்பிட்டுள்ளார்.

## ‘விஜய’...

**வாக்கிய பஞ்சாங்கம்**

கைவிஷேசம் :

சித்திரை மாதம் முதலாம் நாள்
ஞாயிற்றுக்கிழமை காலை 10.04 - 12.03
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.05 - 2.10
பிற்பகல் 02.22 - 4.11

சித்திரை மாதம் இரண்டாம் நாள்
திங்கட்கிழமை காலை 9.14 - 9.48
திங்கட்கிழமை முற்பகல் 10.09 - 11.58

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி**

சித்திரை மாதம் முதலாம் நாள்
ஞாயிற்றுக்கிழமை இரவு 10.26 - 12.02
சித்திரை மாதம் 2ஆம் நாள்
திங்கட்கிழமை காலை 6.02 - 7.14
முற்பகல் 9.14 - 10.01

# வீதித்திருத்தம் அமோகம் அதன் மறுபக்கம் அவலம்

யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் தென்பகுதி ஒப்பந்த நிறுவனங்களின் பொறுப்பற்ற செயல்களினால் அவ்வீதிகளில் பயணித்து வரும் பொது மக்கள் உள்ளிட்ட வாகனச் சாரதிகள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் ஆவரங்கால் சந்திக்கும், வல்லைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதிகள் ஏற்கனவே செப்பனிடப்பட்டிருந்த வீதி ஓரங்களை மீண்டும் புனர்நிர்மாணம் என்ற பெயரில் ஆங்காங்கே கிறவல் மண்களை கிளறி குவித்து வைத்து விட்டு தற்போது அனைவரும் சித்திரைப் புத்தாண்டு விடுமுறையில் தமது சொந்த இடங்களுக்கு சென்றுவிட்டனர். வீதி ஓரங்களில் வீடுகளின் பிரதான வாயில்களுக்கு அருகாமையிலும், சிற்றொழுங்கைகள் பிரதான வீதியில் சந்திக்கும் இடங்களுக்கு அருகாமையிலும் இவ்வாறு கிறவல் மண் குவிக்கப்பட்டிருப்பதால் அப்பகுதி மக்களும் அவ்வீதியால் செல்லும் வாகனச் சாரதிகளும் பயணம் செய்வதில் பெரும் இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதேவேளை கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் பிரதான வீதியில் ஒரு சிறுபகுதி நீண்ட காலமாக காப்பெற் கலவை இடப்படாது சிறுகுழிகளுடன் காணப்படுகின்றது. மேலும் அப்பகுதியில் உள்ள சில மதகுப் பகுதிகள் செப்பனிடப்படாது பிரதான வீதியை விட பதிவான நிலையில் காணப்படுகின்றது. எனவே இவ்வாறான நிலைமைகளை சீர்செய்து பொதுமக்களின் போகுகுவரத்தினை சீர் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். (03)

# வெங்காய விதைகள் அழிப்பு

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 472 கிலோ கிராம் பெரிய வெங்காய விதைகளை கட்டுநாயக்க விமான நிலையை சுங்கப் பிரிவினரால் அழிக்கப்பட்டுள்ளன.

தாவரவியல் சட்டத்திற்கு அமைவான அனுமதிப் பத்திரமின்றி இந்த பெரிய வெங்காய விதைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பணிப்பாளர் சரத் நேஹனில் குறிப்பிட்டுள்ளார். அவற்றின் பெறுமதி 18 இலட்சம் ரூபாவிற்கு அதிகமென அவர் கூறியுள்ளார்.

கடந்த மூன்றாம் திகதியும் 9ஆம் திகதியும் சட்டவிரோதமாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 860 கிலோகிராம் பெரிய வெங்காய விதைகள் தீவைத்து அழிக்கப்பட்டதாக சரத் நேஹனில் மேலும் தெரிவித்துள்ளார்.

# மூலிகை கடத்தல் முறியடிப்பு

சட்டவிரோதமாக வெளி நாட்டுக்கு கொண்டுசெல்லப்படவிருந்த இலங்கைக்கே உரித்தான ஒருவகை மூலிகை விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பெட்டிக்குள் சூட்சமமான முறையில் மறைத்து வைக்கப் பட்டிருந்தபோது இவை கைப் பற்றப்பட்டதாக பிரதி சுங்கப் பணிப்பாளர் சமந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

இதன்போது 323 கிலோ கிராம் மூலிகை கைப்பற்றப்பட்டுள்ளது.

## அமெரிக்க...

தப் பணத்தை செலுத்த உள்ளது. எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கு முன்னதாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொது மக்கள் தொடர்பு முகவர் நிறுவன மொன்றின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது

# யாழ். நகரில் பாதுகாப்பு அதிகரிப்பு; பொலிஸ் படையணி களத்தில்

(யாழ்ப்பாணம்)

புதுவருட பண்டிகைக்காலத் திற்கென விசேட பொலிஸ் பாதுகாப்புச் சேவை இடம்பெறுவதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

நாளை மறுதினம் தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாடப் படும் நிலையில் புதுவருட ஆடைகள் மற்றும் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்ய பொதுமக்கள் யாழ். நகரப்பகுதிகளுக்கு வருகின்றமையால் நேற்று அதிகளவான பொலிஸார் கடமையில் ஈடுபட்டனர்.

இவர்கள் சனநெரிசல் மிக்க பகுதிகளில் சிவில் உடையுடன் கடமையில் ஈடுபட்டு உள்ளதாகவும், களவுகள், மற்றும் போக்குவரத்தை சீரமைததல், போன்ற பல்வேறு வேலைத திட்டங்களையும் பொலிஸார் மேற்கொள்வர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். தங்களது உடமைகளை தாங்களே பாதுகாக்க வேண்டும் என்று யாழ். பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# மோசடி செய்த இலங்கையர் கைது

பொது நலவாய நாடுகளின் செயலகத்தில் 37 ஆயிரத்து 500 யூரோக்களை மோசடி செய்த இலங்கையர் ஒருவருக்கு 20 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அவர லண்டன் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட போது, அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் செயலகத்தில் நிதியாளராக இருந்த அவர், பிரித்தானியாவால் வழங்கப்பட்ட 15 மில்லியன் யூரோவில் இருந்து இந்த நிதியை மோசடி செய்துள்ளார். ஏற்கனவே அவர் சாதாரண செலவினங்களுக்கு அதிக கட்டணங்களை காட்டுவதாக முறைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அவர் சூதாட்ட பித்து கொண்டவர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

பொது நலவாய நாடுகளின் செயலகத்தில் 37 ஆயிரத்து 500 யூரோக்களை மோசடி செய்த இலங்கையர் ஒருவருக்கு 20 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று அவர் லண்டன் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட போது, அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டது. பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் செயலகத்தில் நிதியாளராக இருந்த அவர், பிரித்தானியாவால் வழங்கப்பட்ட 15 மில்லியன் யூரோவில் இருந்து இந்த நிதியை மோசடி செய்துள்ளார்.


ஏற்கனவே அவர் சாதாரண செலவினங்களுக்கு அதிக கட்டணங்களை காட்டுவதாக முறைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அவர் சூதாட்ட பித்து கொண்டவர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

# 14 துப்பாக்கிகளுடன் தெற்கில் ஒருவர் கைது

அனுமதிப் பத்திரம் இன்றி ஒரு துப்பாக்கி மற்றும் 13 கட்டுத் துவக்குகள் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கெக்கிராவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கெக்கிராவ - கலேன்பிந்துனுவெவ பிரதேசத்தில் இருந்து குறித்த துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த துப்பாக்கிகள் விலங்கு வேட்டைக்கு பயன்படுத்தப்பட்டு வந்ததாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கலாவெவ - விஜிதபுர பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# குறுகிய அரசியலே கூட்டமைப்பின் இலக்கு



(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு தவறான வழியைக் காட்டி சுயலாப அரசியலை மட்டும் வளர்த்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார். வடகின் வசந்தம் திட்டத்தின் ஊடாக செல்வநாயகபுரம் கிராமத்திற்கான மின்சாரம் வழங்கும் நிகழ்வினை ஆரம்பித்து வைத்து மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்கள் என்று வார்த்தைகளில் மட்டும் உச்சரித்துவிட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு தமது சுயலாப அரசியலை மட்டும் வளர்த்துக்கொண்டு இருக்கின்றனர் எனவும், கடந்த கால யுத்த அனர்த்தம், இடப்பெயர்வுகளை தாண்டி சுமுகமான வாழ்விற்கு மக்கள் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். இதேசமயத்தில் சில சக்திகள் தமது சுயலாபத்திற்காக மக்களின் சுமுகமான வாழ்வின்ன சீர்குலைத்து சின்னாபின்னமாக்கி அரசியல் நடாத்த முனைகின்றனர். எனவே மக்களாகிய நீங்கள் உங்களுக்கு எவர் கரம் கொடுக்கிறார்களோ அவர்களை நம்புங்கள் அத்துடன் இருள்மயமாகி விளங்கும் அனைத்துக் கிராமங்களும் வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக ஒளிமயம் பெற்று வருகின்றது அனைத்து கிராமங்களையும் ஒளிபெறச்செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜங்கரன், ஈ.பி.டி.பியின் அச்சுவேலி இணை இணைப்பாளர் லிங்கேஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

# புலிகளின் மற்றுமொரு பதுங்குகுழி உருத்திரபுரத்தில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பதுங்கு குழியொன்றை புலனாய்வுப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சி உருத்திபுரம் என்னும இடத்தில் இந்த பதுங்கு குழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

10 அடி ஆழத்திற்கு அகழ்வு செய்ததன் மூலம் குறித்த பதுங்கு குழியை புலனாய்வுப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளனர். இந்த பதுங்குகுழியை முழு அளவில் அகழ்ந்து எடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டு இந்த பதுங்குகுழி நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம் எனவும் 2007 ஆம் ஆண்டு வரையில் பிரபாகரன் இந்த பதுங்கு குழியில் தங்கியிருந்திருக்க வேண்டுமெனவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். குறித்த பதுங்கு குழியில் பாரியளவில் வானூர்திகளை தாக்கியழிக்கும் ஏவுகணைகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# டோகாவில் விபத்து இலங்கையர் இருவர் பலி

(கொழும்பு)

டோகாகட்டாரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இருவர் மரணமடைந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் இலங்கையர்களும் அடங்குகின்றனர்.

டோகவிலுள்ள அபு அபோட் மேம்பாலத்திற்கு கீழுள்ள வீதி சமிக்ஞை விளக்குக்கு அருகிலேயே இவ்விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்துல் ஸ்மீட் முஹமட் பைஸான் (வயது-33), எம்.என்.பிரசன்ன றூவன் (வயது-27) ஆகியோரே இவ்விபத்தில் மரணமடைந்தவர்களாவர்.

# சன் ரைசர்ஸ் அணி வெற்றி



ஐ.பி.எல். தொடரின் 14 ஆவது லீக் ஆட்டம் நேற்று டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது. இதில் உள் ளூர் அணியான டில்லி டேர்டெவில்ஸ் அணி, ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணியை எதிர்கொண்டது. நாணயச் சுழற சியில் வென்ற டில்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இந்த தொடரில் முதல் முறையாக சேவாக் களமிறங்கினார். அவருடன் வார்னர் மற்றொரு தொடக்க வீரராக இணைந்தார்.

ஆனால் ஸ்டெயின் வீசிய முதல் ஓவரில் 4 பந்துகளை எதிர்கொண்ட வார்னர், ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சேவாக், கப்டன் ஜெயவர்தன ஆகியோரும் தலா 12 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த நிலையில், இஷாந்த் சர்மாவின் அடுத்தடுத்த பந்துகளில் விக்கெட்டை இழந்தனர்.

இதையடுத்து ஜுனேஜா போத்தா இருவரும் விக் கெட்டை காப்பாற்றும் முயற்சியாக நிதானமாக ஆடினர். ஆனால், போத்தா 14 பந்துகளில் 9 ஓட்ட ங்கள் மட்டுமே எடுத்தார். எனவே, 11 ஆவது ஓவரில்தான் டில்லி அணி, 50 ஓட்டங்களைத் தொட் டது.

ஓட்ட எண்ணிக்கை 65 ஆக இருந்தபோது, ஜுனேஜா 15 ஓட்டங்களிலும் ஆறுதல் அளித்த இர்பான் பதான 23 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தார். மார்கல், நதீம் ஆகியோர் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தனர். ஒருபுறம் விக்கெட் விழுந்தாலும், மறுமுனையில் பொறுப்புடன் ஆடிய ஜாதவ் 20 பந்துகளில் 30 ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல் பெற்றனர். இதனால் டில்லி அணி 20 ஓவர் முடிவில் 114 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சன் ரைசர்ஸ் தரப்பில் ஸ்டெயின், இஷாந்த் சர்மா, பெரேரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் கைப்பற்றினர். இதையடுத்து 115 ஓட்டங்கள் என்ற இலக்குடன் சன் ரைசர்ஸ் அணி களமிறங்கியது. 19.2 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை எட்டி ஹைதராபாத் அணி வெற்றியீட்டியது.

# சமுர்த்தி வங்கிகள் இன்றும் திறந்திருக்கும்

சித்திரைப் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக இன்று சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் சகல பிரதேச செயலர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது.

இன்றையதினம் ஏப்ரல் மாதம வரையான பணமுத்திரைக்குரிய கொடுப்பனவுகளை வங்கிச் சங்கங்களில் சமுர்த்தி பயனாளிகள் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (26)

## நளின் நிறுவனத்தின் அறிவித்தல்

மீளப்பெறாத பொருட்கள் தொடர்பாக

எமது நிறுவன உத்தரவாதம், திருத்த வேலைகளை மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் எம்மிடம் 01-03-2013 ற்கு முந்திய காலப்பகுதியில் ஒப்படைத்த அனைத்து கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை அவற்றிற்குரிய பற்றுச் சீட்டு, உத்தரவாத பற்றுச்சீட்டு என்பவற்றை ஒப்படைத்து வருகின்ற 01-05-2013 ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

01-05-2013 ம் திகதிக்கு பின், பொறுப்பேற்காத எந்த பொருட்களுக்கும் நளின் நிர்வாகம் பொறுப்பேற்காது. (C/2492)

நளின் முகாமையாளர்

NALIN INFORMATION TECHNOLOGIES

NALIN Information Technologies Pvt Ltd.

195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.

TP-0212221166/1121, 0777667974

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.